திருவள்ளுவர் ஆண்டு 2045

செப்டம்பர் - 2014

# செந்தமிழ்


தொகுதி : 58
பகுதி : 11

விலை ரூ. 10/-


## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில் 05.09.2014 அன்று மலேசியத் தமிழ்க்குயில் கலியபெருமாள் - உலகநாயகி வள்ளலார் அறக்கட்டளைச் சார்பாக 'இரு நண்பர்கள்' என்னும் பொருளில் திருச்சி.கை.கல்யாணராமன் அவர்கள் சொற்பொழிவாற்றினார். உடன் செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திருமிகு.கோச்சடை.இரா.குருசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலாளர் திருமிகு.இரா.அழகுமலை அவர்கள், செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் திருமிகு.சு.வீரணசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் திருமிகு.க.முத்தையாபசும்பொன் அவர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 58
பகுதி : 11
செப்டம்பர் : 2014

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2045



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 10,000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

ஆசிரியர்
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வினைக் கோட்பாடும் மறு பிறப்புக் கோட்பாடும் | முனைவர் பி.ஆர். நரசிம்மன் | 6 |
| அறத்துப்பாலில் ஆளுமை | முனைவர் இளசை சுந்தரம் | 10 |
| நெடுநல்வாடைத் தலைவியின் உளப்போராட்டமும், உளத்தற்காப்பு இயங்குமுறையும் | முனைவர் யாழ். சு. சந்திரா | 14 |
| கானல்வரியில் வாழ்த்தும் விளைவும் | வ. சேகர் | 18 |
| தமிழர்கண்ட அரசியல், பொருளியல், குமுகவியல் கோட்பாடுகள் | முனைவர் கா. அரங்கசாமி | 23 |
| அடிகளாசிரியரின் தொல் - சொல் - ஆழ்நோக்குப் பதிப்பு | ஆ. அருள்மணி | 30 |
| திருக்குறளில் கனிமலர் | ஆறுவிரல் ஐம்பொறி | 34 |
| வள்ளுவரின் மருத்துவச் சிந்தனைகள் | வை. ஶ்ரீதர் | 35 |
| திருமுறைத்தலம் திருஅன்னியூர் - ஓர் ஆய்வு | தருமையாதீனப் புலவர் தா. குருசாமி தேசிகர் | 39 |

# இதழ் மணம்

பேரன்புடையீர்!

வணக்கம். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த முன்னோர்களை அடியொற்றி, வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் தொடங்கப்பெற்ற 'நான்காம் தமிழ்ச் சங்கம்' என்று தமிழ் ஆர்வலர்களால் பாராட்டப்பெறும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 114ஆவது அகவையின் இனிய வாழ்த்துக்களோடு இம்மாத இதழ் வெளிவருகிறது.

மனித வாழ்க்கையில் நிகழும் நன்மை, தீமைகளாக உள்ள செயல்களுக்குக் காரணமாக அமைகின்ற கருத்தமைவைப் புரிந்து கொள்ள "வினைக் கோட்பாடும் மறுபிறப்புக் கோட்பாடும்" உதவியாக இருக்கும் என்பதை முனைவர் பி.ஆர். நரசிம்மன் அவர்கள் தம் கட்டுரையில் சிறப்புற எடுத்தியம்பியுள்ளார்.

மனிதனின் மேன்மைக்குக் காரணமாக இருப்பது அவனின் ஆளுமைப்பண்பே. அப்பண்பை வள்ளுவர் அறத்துப்பாலில் வலியுறுத்தியுள்ள பாங்கினை, முனைவர் இளசை சுந்தரம் அவர்கள் வெளிக்காட்டியமை பாராட்டிற்குரியது. தலைவனின் பிரிவு காரணமாகத் துயருற்ற தலைவியின் உளப்போராட்டமும், அதனைச் சமன் செய்வதற்காக அவள் மேற்கொண்ட உளத்தற்காப்பு இயங்குமுறையும் குறித்து முனைவர் யாழ். சு. சந்திரா அவர்கள் வெளிப்படுத்தியுள்ள கருத்துண்மைகள் வாழ்த்துதலுக்குரியது.

கருத்து வேறுபாட்டுச் சூழலில் இருந்த கோவலனும் மாதவியும் பாடிய கானல்வரி - வாழ்த்துப்பாடலானது அவர்களின் மனவெழுச்சியைக் காட்டிய திறத்தை ஆய்வாளர் வ. சேகரின் அவர்கள் தம்கட்டுரையில் திறம்பட வெளிப்படுத்தியுள்ளார். பண்டைத்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள் தமிழரின் அரசியல், பொருளியல், குமுகவியல் கோட்பாட்டைச் சிறப்புற புலப்படுத்துகின்றன என்ற கருத்தை முனைவர் கா. அரங்கசாமி அவர்கள் முழுமையான சான்றுகளோடு நிறுவியுள்ளமை பாராட்டிற்குரியது.

102 அகவை வரை தமிழ்த் தொண்டாற்றிய அடிகளாசிரியரின் தொல்காப்பியம் சொல்லதிகாரப் பதிப்பை ஆழ்நோக்கு அடிப்படையில் ஆய்வாளர் ஆ.அருள்மணி அவர்கள், தம் கட்டுரையில் எடுத்துக்காட்டியுள்ளார். வள்ளுவரின் சொல்லாற்றலை நுட்பமாகத் தொடர்ந்து ஆய்வு செய்துவரும் ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் இவ்இதழிலும் சிறப்புற எடுத்துக் காட்டியுள்ளார்.

தமிழர்கள் மருத்துவத்தில் சிறந்து விளங்கிய தன்மையை யாவரும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில், ஆய்வாளர் வை. ஸ்ரீதர் அவர்கள் "வள்ளுவரின் மருத்துவச் சிந்தனைகளை" முறையாக வெளிப்படுத்தியுள்ளார்.

பெண்மையின் வலிமையை எடுத்தியம்பும் வகையில் திருமுறைத்தலமான திருஅன்னியூர் குறித்த வரலாற்றுச் செய்திகளைத் தருமையாதீனப்புலவர் குருசாமி தேசிகர் அவர்கள் தமிழ்மணத்தோடு வெளிப்படுத்தியமை பாராட்டிற்குரியது.

- ஆசிரியர்

# வினைக் கோட்பாடும் மறு பிறப்புக் கோட்பாடும்

முனைவர். **பி.ஆர். நரசிம்மன்.**
மதுரை.

மெய்ப்பொருள் இயலில் வினைக்கோட்பாடும், மறு பிறப்புக் கோட்பாடும் மிக முக்கியமான ஒரு நிலையைப் பெற்றுள்ளன. இவ்விரு கருத்துக்களும் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பதாகவும் ஒன்றின் விளைவே மற்றது என்பதாகவும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவற்றின் சார்புத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு இக்கோட்பாடுகளைப் பற்றிய அறிவு அவசியமாகின்றது.

வினை என்பது பொதுவாகச் செயல் என்று பொருள்படும். ஆனால் அனைத்துச் செயல்களும் வினைகளாக உள்பொருளியல் கருதுவதில்லை. அதே சமயம் அனைத்து வினைகளையும் செயல்களாகக் கருதுகின்றோம். இக்கூற்று வினைக்கும் செயலுக்கும் உள்பொருளியலில் வேறுபாடு உள்ளது என்பதை அறிவுறுத்துகின்றது. ஒரு செயல் ஒருவனால் இயக்கப்பட்டால், அச்செயலை இயக்குகின்றபொழுது அவனுக்கு, தான் இச்செயலைச் செய்கின்றோம் என்ற உணர்வாகிய அகங்காரமோ அல்லது இச்செயல் என்னால் செய்யப்படுகின்றது என்ற உணர்வாகிய மமகாரமோ இருந்தால் அச்செயல் வினையாகக் கருதப்படுகிறது. அகங்காரம், மமகாரம் என்ற உணர்வுகளின்றிச் செயல்களைச் செய்கின்ற நிலையில் அவை இறைபணிகளாக மெய்ப்பொருளியல் கருதுகின்றது.

வினைகள் வினைக்கோட்பாட்டின்படி செயல்படுவதாகும். வினைக் கோட்பாடு என்பது எந்த ஒரு செயலும் அது நல்வினையாக இருந்தாலும், தீவினையாக இருந்தாலும் அச்செயலின் பயனைச் செய்தவன் துய்த்தே தீரவேண்டும் என்ற கருத்தாகும். இக்கோட்பாட்டிற்கு எந்த ஒரு விதிவிலக்கும் கிடையாது என்பது இந்து சமயத்தின் முடிந்த முடிவாகும். வினைப் பயன்கள் உடனடியாகவோ, காலம் தாழ்த்தியோ துய்க்க வேண்டிய நிலையில் இருக்கும். இவ்வினைப் பயன்களே மனிதனின் அனைத்து நுகர்வுகளுக்கும் காரணமாக அமைவன. ஒரு மனிதன் இன்று துய்க்கின்ற மகிழ்ச்சியோ அல்லது துன்பமோ, அம்மனிதன் ஏற்கனவே செய்த வினைப் பயன்களே ஆகும்.

இவ்வினைப் பயன்களின் அடிப்படையில் எழுந்தது தான் மறுபிறப்புக் கோட்பாடு. ஒரு மனிதன் தான் இப்பிறவியில் செய்த வினைகளின் பயன்களை இப்பிறவியிலேயே துய்க்க நேரிடலாம் அல்லது

இன்னொரு பிறப்பிலே துய்க்க நேரிடலாம். அவ்வழியில் மறுபிறப்பில் வினைப் பயன்களைத் துய்க்க வேண்டியிருப்பின் அம்மறுபிறப்பானது முந்தைய பிறவியின் வினைப் பயன்கள் தீர்மானிப்பதாகச் சொல்லப்படுவதுதான் மறுபிறப்புக் கோட்பாடு. எனவே வினைக் கோட்பாடு மறுபிறப்புக் கோட்பாட்டை உள்ளடக்கிய ஒன்றாகும்.

இவ்வினை-மறுபிறப்புக் கோட்பாடு இந்நிலத்தில் மட்டுமின்றி உலகத்தின் ஏனைய நிலப் பரப்புகளிலும், இந்து சமயத்தில் மட்டுமின்றி பிற சமயங்களிலும் நிலைபெற்றுள்ளது. ஆனால் சில சமயங்களில் வினைப் பயன்கள் துய்க்கப்டுகின்ற இடங்கள் மாறுபடுகின்றன.

சான்றாக நல்வினைப் பயன்களைத் துய்ப்பது சொர்க்கத்திலும், தீவினைப் பயன்களைத் துய்ப்பது நரகத்திலும் என்பதாகவும், மேலும் மேலுலகம், கீழுலகம் என்பன போன்ற கருத்தமைவுகளும் காணப்படுகின்றன. இவையனைத்துமே ஒவ்வொரு பிறப்பிலும் மாறுபாடுகள் கொண்ட உடல்களைப் பெறுகின்ற ஆன்மா ஒன்றே என்ற அடிப்படைக் கருத்தினை ஏற்றுக் கொள்கின்ற நிலையில் மட்டும் இயல்வதாகும். இவ்வாறு ஒருவன் செய்கின்ற வினையினுடைய பயன்கள் அவனே துய்த்துத் தீர்க்க வேண்டும். அவ்வாறு துய்த்துத் தீர்ப்பதற்கு அவன் மீண்டும் மறுபிறப்பு எடுக்க வேண்டும். அம்மறுபிறப்பும் அப்பிறப்பின் வாழ்க்கையமைப்பும் வினைப் பயன்களால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதுதான் பொதுவான வினை, மறுபிறப்புக் கோட்பாடாகும்.

வினை, மறு பிறப்புக் கோட்பாடு ஒன்றை ஒன்று முற்றிலும் சார்ந்ததாகப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் நமது இலக்கியங்களில் காணப்படும் கருத்துக்கள் சில சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. மகாபாரதம் வினைக்கோட்பாட்டைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது எப்படிப்பட்ட மகிழ்ச்சியோ அல்லது துன்பமோ ஒரு மனிதன் பெற்றாலும் அது அவன் முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைப் பயன்களே ஆகும் என்கின்றது. இவ்வரையறை எந்த ஒரு செயலை எவன் செய்தாலும் அவனே அவ்வினையின் பயனைத் துய்ப்பான் என்று குறிப்பிடுவதாகும். ஆனால் மனுநீதியில் இதற்கு மாறான சில கருத்துக்கள் காணப்படுகின்றன. மனு, தண்டனையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அரசன் தன் கடமைகளில் தவறுவானாகில் அவன் சுற்றத்தாரும் சேர்ந்தே துன்புறுவர் என்று குறிப்பிடுகின்றார். மேலும் உண்மையுள்ள ஒரு மனைவி அவளுடைய கணவனது துன்பங்களிலும் பங்கேற்கிறாள் என்றும் மனுநீதி குறிப்பிடுகின்றது. இக்கருத்தானது ஒருவனது வினைப்

பயன் மாற்றப்படக்கூடிய ஒன்றாக அமைகின்றது. வினைப் பயன்களின் மாற்றம் பிற வகைகளிலும் ஏற்படலாம் என்ற கருத்தும் சுட்டப்படுகின்றது. சான்றாக விருந்தளிப்பவருடைய வினைப்பயன்கள் விருந்தாளிக்கும் செல்லலாம். மேலும் ஒருவர் தானே விரும்பித் தன் வினைப் பயன்களை மற்றவர்க்கு அளிக்கலாம். இதற்குச் சான்றாக, கர்ணன் தன் வாழ்நாளில் செய்த தருமத்தின் பயன்களையெல்லாம் கிருஷ்ணனுக்கு அளித்ததைக் கூறலாம். மகாபாரதத்திலும் கூட ஒருவருடைய வினைப் பயன் அவருடைய குழந்தைகளுக்கோ அல்லது சந்ததியினருக்கோ மாற்றப்படலாம் என்ற கருத்து காணப்படுகிறது. அறிவியல் வழியில் நிரூபிக்கப்படும் பாரம்பரியக் கோட்பாடுகளிலும் இக்கருத்துக்குச் சான்றுகள் உள்ளன. உபநிடதங்களில் வினைப் பயன்கள் வேறு நிலைகளிலும் துய்க்கப்படும் என்ற கருத்து காணப்படுகின்றது. இவையனைத்தும் சேர்ந்து ஒரு மனிதனுடைய நடத்தையை உண்மையிலேயே அவனது முற்பிறவியின் வினைப் பயன்கள் நிர்ணயிக்கின்றனவா என்ற வினாவினை எழுப்புகின்றன. மேலும் ஒருவனது வினையும் அவனது நடத்தையும் எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்ற சிக்கல்கள் இவற்றால் எழுகின்றன. பொதுவாக வினைகள் நடத்தையினுடைய வெளிப்பாடுகள் என்றும் கருதப்படுகின்றன. ஆனால் வினைப் பயன்கள் வேறு வினைகளாகப் பயனளிக்கும் பொழுது மாற்றத்தக்கனவாக இருக்கக்கூடும் எனில் வினைகளை நடத்தையின் வெளிப்பாடுகள் என்றும் கருதுதல் சிரமமான ஒன்றாக அமைகின்றது.

வினை, மறுபிறப்புக் கோட்பாட்டில் மற்றொரு சிக்கலைப் பின்வருமாறு விளக்கலாம். இப்பிறவியில் ஒரு மனிதனுடைய நடத்தை அவனது முற்பிறவியின் பயனே என்று கூறுவதானது விதிக் கோட்பாட்டின்பாற்படும். இவ்விதிக் கோட்பாடு மனித வாழ்க்கையின் இன்ப துன்பங்களில் உள்ள ஏற்றத் தாழ்வுச் சிக்கலைத் தீர்ப்பதற்கு எந்த ஒரு வழியையும் சொல்வதில்லை. மாறாக இவ்வேற்றத்தாழ்வை விதிப்பயனே என்று துய்க்க வேண்டியது என்ற தன்னிலையிரக்கத்தைச் சுட்டுகின்றது. இந்நிலை, ஒருவன் தான் செய்த வினைகளே அவனுடைய இன்றைய நிலைக்குக் காரணமானவை என்று குறிப்பிடுவதினின்று விலகி, அவன் செய்த வினைகளின் பயன்களாக விளங்கும் பிறவினைகளே இன்றைய நிலையை உறுதி செய்கின்றன என்ற முடிவிற்கு நம்மை இட்டுச் செல்கின்றது. ஒருவன் தான் முற்பிறவியில் செய்த வினைகள் அவ்வினைகளைச் செய்து முடித்தவுடனே அவனுக்கும் அவ்வினைக்கும் உள்ள தொடர்பு முடிந்து விடுகின்றது. ஆனால் அவ்வினையின் பயன்கள்

வேறு வகை வினைகளாக இப்பிறவியில் செய்கின்ற வினைகளை உறுதி செய்கின்றன. எனவே இப்பிறவியின் வினைகள் அம்மனிதனுக்கு நேரடித் தொடர்பு இல்லாத வினைப்பயன்களாகிய வினைகளால் உறுதி செய்யப்படுகின்றன.

இது வேறொரு சிக்கலை எழுப்புகின்றது. அச்சிக்கலாவது மனிதனது சுதந்திரமான நிலையினைப் பற்றியதாகும். ஒரு மனிதன் தான் செய்கின்ற வினைகளுக்குத் தானே பொறுப்பு என்ற நிலை இக்கருத்தினால் மாறிவிடுகின்றது. ஒருவன் செய்கின்ற வினைகள் அனைத்தும் பிறவினைகளால் நிர்ணயிக்கப்படுபவையெனில் மனிதனுடைய அல்லது ஆன்மாவினுடைய சுதந்திரம் என்பது வெறும் சொல்லளவிலே நின்றுவிடுகின்றது. இப்பிறவியில் செய்கின்ற வினைகள் அனைத்திற்கும் வினைப்பயன்களாகிய வினைகள் காரணமெனில் அம்மனிதன் விதியின் கைப்பாவையாக இருக்கின்றவன் ஆகின்றான். மனிதனுடைய சுதந்திரத்திற்கு இடமில்லாமல் போய்விடுகின்றது. ஒரு மனிதன் தன்னுடைய நிலைக்கும் முடிவிற்கும் தானே காரணமாவான் என்ற கருத்தும் பொருத்தமற்றுப் போகின்றது.

வினைக்கோட்பாடு மற்றொரு சிக்கலும் இடமளிக்கின்றது. வினைக் கோட்பாடானது இறைவனின் அருள் கோட்பாடுடன் முரண்படுவதாக அமைகின்றது. மன்னித்தல் என்ற கருத்தானது மனிதனின் குற்றங்களுக்கும் இறைமைக்கும் உள்ள தொடர்பை உள்ளடக்கியுள்ளது. ஒருவன் தான் செய்த பிழைக்கு வருந்துவானேயானால் இறைவன் அவனை மன்னித்து அவனுடைய வினைப்பயன்களினின்றும் காப்பார் என்ற கருத்து வினைக்கோட்பாடுடன் ஏற்ப அமைவதில்லை. இறைவன் பகவத்கீதையில் அனைத்தையும் துறந்து என்னைச் சரணடைவாய் என்று கூறி இருப்பது அனைத்திற்கும் தானே அடிப்படைக் காரணம், மனிதர்கள் வெறும் கருவிகளே என்ற கூற்றுக்களுக்கு வினைக் கோட்பாட்டின்படி பொருளில்லாது போய்விடுகின்றது. மேலும் அருளுதல் என்ற கருத்தானது வினைக்கோட்பாட்டை மறுக்கின்ற ஒன்றாக இருக்கின்றது.

மேற்கூறிய அனைத்துக் கருத்துச் சிக்கல்கள் இருப்பினும் இந்நிலத்தில் தொன்றுதொட்டு வழங்கிவரும் இந்துசமயம் இன்றளவிலும் வினை-மறுபிறப்புக் கோட்பாட்டை ஒரு சிறந்த கோட்பாடாகவே கருதி வருகின்றது. இவ்வினை, மறுபிறப்புக் கோட்பாட்டின் சிக்கல்களை நன்கு சிந்தித்து அதனை மேலும் சிறக்கச் செய்வது இச்சமயத்தைப் பின்பற்றுபவர்களின் கடமையாகும்.

# அறத்துப்பாலில் ஆளுமை

முனைவர்.
**இளசை சுந்தரம்**
மதுரை

## முன்னுரை

வரலாறு என்பது வந்து போனவர்களின் தொகுப்பு அல்ல : சாதனைகளைத் தந்து போனவர்களின் தொகுப்பு. வள்ளுவத்தை நமக்குத் தந்ததின் மூலம் சாதனையாளர்களில் முதல் வரிசையில் நிற்கிறார் திருவள்ளுவர். ஒரு நூல் ஆடையாகும் அதிசயத்தைக் கண்டது உண்டா? உண்டு. திருக்குறள் என்ற ஒரு நூல் தமிழன்னைக்கு ஆடையானது. ஆளுமைத்திறன் வளர்ச்சி என்றால் அது ஏதோ மேல்நாட்டுச் சிந்தனையாளர்கள் கண்டுபிடித்தது போன்ற மாயை உள்ளது. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே வள்ளுவம் இது பற்றிச் சிந்தித்திருக்கிறது.

## வாழ்வியல் கூறும் வள்ளுவம்

ஒரு மனிதனுக்கு இரண்டு பிறப்புகள் உண்டு. ஒன்று அவன் குழந்தையாகத் தாய் வயிற்றில் பிறப்பது. மற்றொன்று அவன் வளரும் கட்டத்தில் தன்னிலிருந்து தன்னைப் பிரசவிப்பது. அதாவது மனிதனாகப் பிறப்பெடுத்து, தாய் வயிற்றுப் பிறப்பு உடல் சார்ந்தது. தன்னிலிருந்து தன்னைப் பிரசவிப்பது மனம் சார்ந்தது. எனவே தான் ஆளுமைத்திறன் பற்றிப் பேசுகிற அத்தனை அறிஞர்களும் மனம் பற்றியே அதிகம் பேசுகிறார்கள்.

## மனமெனும் மந்திரச்சாவி

வள்ளுவரும் மனம் பற்றி பேசுகிறார்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

இதைத் தான் "மனதைப் பூஜ்யமாக்குங்கள், அதில் நல்லவற்றை நிரப்புங்கள்" என்கிறது ஜென் புத்த மதம். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்குத் திறமைகள் மட்டும் போதாது. நல்ல குணமும் வேண்டும். மகிழ்ச்சி என்பது மனநிலையைப் பொறுத்தது. பொறுமை, சாந்தம், கருணை ஆகியவை மனநிலையைச் சீராக வைத்துக் கொள்ள உதவும். எனவே தான் மனதைத் தூய்மைப்படுத்தாமல் செய்யப்படும் அத்தனையும் வீண் ஆரவாரம் என்கிறார் வள்ளுவர்.

## சாதனையாளர்கள்

காலம் என்ற சிற்பி நம்மைச் செதுக்கிக் கொண்டிருக்கிறான். அதில் நாம் சிற்பமா? சிதறி விழும் கற்களா? என்ன ஆகப் போகிறோம்? சிற்பமாகத்தான் ஆக வேண்டும். அதற்குச் சாதனைகள் படைக்க வேண்டும். அதற்குச் சோதனைகளைத் தாங்க வேண்டும். உளியின் வலிக்குப் பயந்த கல் சிற்பமாக முடியாது. துளையிடப்படாத மூங்கில் புல்லாங்குழல் ஆக முடியாது. சுடப்படாத தங்கம் ஆபரணம் ஆக முடியாது. சிரமப்படாமல் சிகரங்களைத் தொடமுடியாது. அதைத்தான் வள்ளுவர்.

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செய்கரிய செய்க லாதார்"

என்று கூறுகிறார்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம், இரண்டாவது அடியில் வருகிற செயற்கரிய என்பதில் "க" என்பதை "கு" ஆக்கி, சிறியவர்கள் செய்வதற்கு உரியதைக் கூட செய்யமாட்டார்கள் என்று நயம் காணுகிறார்.

## நயம்படப் பேசுதல்

ஒருவருடைய ஆளுமைத் திறனை அடையாளம் காட்டுவது நாவடக்கம். இனிய பேச்சு, இங்கிதமான வார்த்தைகள். இவற்றை வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருக்க காய் கவர்ந்தற்று"

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

"மனிதனின் தவறுகளில் பெரும்பாலானவை நாவிலிருந்தே உண்டாகின்றன" என்கிறார் அரிஸ்டாட்டில்.

"ஜீவிதமும் மரணமும் உன் நாவைப் பொறுத்தது" என்கிறது பைபிள்.

"நாவின் கற்பு மௌனம்" என்பார் நபிகள் நாயகம்.

## வாய்ப்புகள்

வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதும், உருவாக்குவதும் சிறந்த ஆளுமைப்பண்பு. இந்தப் பூமி, படுத்துக்கிடந்தால் படுக்கையாகிறது. எழுந்து நடந்தால் பாதையாகிறது. இதனையே வள்ளுவர்,

"இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்" என்று எடுத்துக்காட்டுகிறார்.

எத்தனையோ வாய்ப்புகளை இந்த நிலம் நமக்கு வைத்திருந்தும் ஒன்றுமில்லையே என்று புலம்புவது அறியாமை அல்லவா? அதைப் பார்த்து பூமித் தாய் ஏளனமாகச் சிரிக்கிறாளாம்.

## மன்னிக்கும் மாண்பு

ஒருவரின் ஆளுமைத் திறனில் மன்னிக்கும் மாண்பு மிக முக்கியமானது. ரஷ்ய அறிஞர் டால்ஸ்டாய் அவர்களுக்கும் அண்ணல் காந்தியடிகளுக்கும் கடிதப் பரிமாற்றம் உண்டு. டால்ஸ்டாய் எழுதியிருந்த ஒரு கடிதத்தில் மன்னிப்பது என்பது சிறந்த பண்புதான். ஆனால் தனக்குத் துன்பம் செய்தவரை மன்னிப்பது மட்டுமல்லாமல் அவர் நாணும்படியாக அவருக்கு ஒரு நன்மையைச் செய்வது மிக உயர்ந்த பண்பு என எழுதியிருந்தார். அதைப் படித்த காந்தியடிகள் மிகவும் மகிழ்ந்து அந்தக் கடிதத்தைப் பாராட்டி எழுதினார். அதற்கு டால்ஸ்டாய், இது எனது கருத்து அல்ல. உங்கள் நாட்டில் திருக்குறள் என்ற நூல் உள்ளது. அதன் ரஷ்ய மொழி பெயர்ப்பைப் படித்தேன். அந்த நூலில் தான் இந்தக் கருத்து உள்ளது என்று எழுதியிருந்தார். அந்தக் குறள் இதுதான்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

அதன் பிறகு தான் காந்தியடிகளுக்குத் திருக்குறள் படிப்பதில் நாட்டம் ஏற்பட்டது என்பார்கள்.

## வாய்மை வேண்டும்

வள்ளுவர் வகுத்துள்ள வாய்மை அதிகாரத்தின் பத்துக்குறள்களுமே ஆளுமைத் திறனை வளர்த்துக் கொள்ள அவசியம் தேவை. குறிப்பாக :

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

## நேர மேலாண்மை

எல்லோருக்கும் வாய்த்திருப்பது 24 மணி நேரம்தான். அதனைப் பயன்படுத்தும் முறையில் தான் ஒருவன் வெற்றியாளன் ஆகிறான். நேரம் போகவில்லை என்போர் உண்டு. நேரம் போதவில்லையே என்பாரும் உண்டு. முன்னவர் தோல்வியைத் தழுவுவார். பின்னவர் வெற்றியைத் தழுவுவார். ஒரு நதியில் இரண்டு முறை குளிக்க முடியாது என்பார்கள். என்ன பொருள்? ஒருமுறை குளித்த நீர் ஓடியிருக்கும். மறுமுறை நீங்கள் குளிக்கப் போகும் போது வேறு நீர் வந்திருக்கும். நேரத்தின் ஓட்டமும் அப்படித்தான்.

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல் "

என்பது திருக்குறள்.

எந்த நாளையும் வீணாக்காமல் நல்லவற்றைச் செய்தால் அந்தச் செயலே அவரைக் காக்கும். இந்தக் குறளில் வீழ்நாள் படாமை என்பதைக் காலவிரையம் செய்யாமை என்னும் பொருளில் எடுத்துக் கொள்ளலாம்.

## முடிவுரை

அன்றைக்கும், இன்றைக்கும், என்றைக்கும் தேவையான கருத்துக்களைச் சொல்லி மனிதனின் ஆளுமைத்திறனை வளர்ப்பதில் திருக்குறள் முன் நிற்கிறது. திருக்குறளை வாசிப்பது மட்டுமல்ல; அதனையே சுவாசிப்போம். வாழ்வில் வளம் பெறுவோம்.

## வாசகர் வாசகம் ①

*மதிப்பிற்சிறந்த செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகையீர்,*

வணக்கம். செந்தமிழ் சூலை 2014 இதழ் (முன்இதழ் நிறைவு உள்அட்டை) ஆசிரியர் அறிவித்த அரைப்பக்கத்தகவல் பத்தியில் அமைந்திருந்த 'தரவு' என்னும் சொல், கட்டுரையில் ஏந்திநிற்கும் பொருளை, நன்கு விளங்கிக்கொள்ள உதவியது, ஏனெனில், முன்னர் யாப்பில் அமையும் தரவு ஒன்றனையே எளியேன் அறிந்திருந்தேன்!

*திசையெல்லாம் தமிழின் பெருமைகளை எடுத்துச் செ(ா)ல்லும் செந்தமிழில்,* 'இரட்டைக்காப்பியங்களில் முற்பிறப்புச் சிந்தனை மரபு' என்னும் 11 பக்கக்கட்டுரை, நுட்பமான இலக்கியப்பகுதிகளைத் தொகுத்து நிரலாக அளிக்கிறது. முன்னுரையும் கருதுகோளும், அருமை! மணிமேகலையின் பத்து அகச்சான்றுகளுக்கு முன்னும் பின்னும் அமைந்த விளக்கப்பத்திகள் சிறப்பு. நிறைவுரையில் தரவு விளக்கம் பெறுகிறது. முன்னர் கலிப்பாவின் முதலுறுப்பென அறிந்திருந்தேன்!

"அற இலக்கியங்களில் தொன்மம், ஆறு குறுந்தலைப்புகளில் தொன்மத்தை அலசுகிறது. பாலி தவிர்த்து தமிழ்மொழியைத் தேர்வு செய்த காரணம், மெய் சிலிர்க்க வைத்தது! நிலவின் மறுபக்கத்தைப் படம் பிடித்துக் காட்டுவது போல், அரிய கருத்துக்களை, "பாவேந்தர் மறுபக்கம்" முன்வைக்கிறது. "உலகு குளிர" வாசகர் உதடுகளும் உச்சரிக்கின்றன.

தினமணி கட்டுரை, நெஞ்சை நெகிழ்விக்கிறது. உயிருக்கு நிகராக உயர்தமிழைப் போற்றிக் கொண்டாடிய சேதுபதிபுகழ், சிகரத்தில் ஒளிரும் செஞ்சுடர் விளக்கு போல், எங்கும் பரவி நிற்கும். "விலங்கு" ஒரு பக்கக்கட்டுரை, சுருங்கச் சொல்லி, விளங்க வைத்தது. படச்செய்தி, இரண்டு பாக்கள், சிறப்பு! செய்திப்பக்கம் நன்று. படைப்பாளர்களுக்கும், இதழாளர்க்கும் பாராட்டுக்கள்! தொடர்க தூய தமிழ்த்தொண்டு! எளியேனின் கட்டுரை "கம்பர் எழில்பா ஏரெழுபது" செந்தமிழில் வெளியிட்டமைக்கு நன்றி. அன்பு ஏற்றுக்கொள்ளுங்கள்.

புலவர் **சி. பாண்டுரங்கன்,** ஆம்பூர்

# நெடுநல்வாடைத் தலைவியின் உளப்போராட்டமும், உளத்தற்காப்பு இயங்குமுறையும்

முனைவர்.
**யாழ். சு. சந்திரா**
மதுரை.

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான **நெடுநல்வாடை** நக்கீரரால் எழுதப்பட்டது. கடமையைக் கண்ணெனக் கொண்டு செயற்படும் தலைவனுக்கு நல்வாடையாகவும் அவனது பிரிவை எண்ணி வருந்தும் தலைவிக்கு நெடுவாடையாகவும் அமையும் பான்மையை விவரிப்பது; அகமா? புறமா? என விவாதத்திற்கு உட்பட்டு 'அகப்புறம்' எனச் சூட்டப்பட்டது. இச்சங்க பனுவல் பிரதியுள் தலைவனின் பிரிவுத் துயரால் தலைவிக்கு ஏற்படும் உளப்போராட்டமும் அதனைச் சமன்படுத்த முறபடும் தலைவியின் இயங்குமுறையும் செல்நெறியாகிறது.

## தலைவியின் உளப்போராட்டம்

பலரோடு முரண்படும் பாசறைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறான் தலைவன். அவனது பிரிவை எண்ணிக் கலங்குகிறாள் தலைவி. மெல்லணைப் பள்ளியில் படுத்திருக்கிறாள் தலைவி. மேல் விதானத்தில் முரண்மிகு செல்வனான சந்திரனும் உரோகிணியும் ஒருங்கிருக்கும் காட்சி அவளது துயரத்தை அதிகரிக்கிறது. தனது திருமண நாளில் தலைவன் தன்னோடு ஒருங்கிருந்த நாளை நினைவுபடுத்துகிறது அவ்வோவியம்! தனது கண்களில் பொங்கும் கண்ணீரைக் கைவிரல்களால் துடைத்து எறியும் தலைவியின் உளப்போராட்டம் நக்கீரரால்,

> மாஇதழ் ஏந்திய மலிந்துவீழ் அர்ப்பனி
> செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சில தெறியாப்
> புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவை (நெடுநல். 164-166)

எனச் சுட்டப்படுகிறது.

கருதியதை விழைதலும் விழைந்ததைப் பெற இயலாத போது வருந்துதலும் அஞ்சுதலும் கவலையுறுதலும் உள்ளத்தின் இயல்பாகும் என்பது உளவியல் கொள்கை. இத்தகைய நேரங்களில் மனிதனுக்கு அவன் உள்ளமே பகையாவதனைக் கலித்தொகை 'நெஞ்சென்னும் தம்மோடு உடன்வாழ் பகையுடையார்க்கு' (கலி. 77 : 23-24) எனச் சுட்டுவது கருதத்தக்கது.

வாழ்க்கையில் துன்பங்கள் ஏற்படும் போது அதனை உணர்தலும், அதனை எதிர்கொண்டு ஏற்கும் நிலையும் ஒவ்வொருவருக்கும் நேர்கிறது. அந்த வகையில் நெடுநல்வாடைத் தலைவிக்குத் தனது தலைவனைப் பிரிந்து வாழும் துன்ப நிலை ஏற்படுகிறது. அதனை ஆற்றாது அவள் கொண்ட தவிப்பு உளப்போராட்டமாக உருவெடுத்து, அரிப்பனி நீராகக் கண்களிலிருந்து மலிந்து வீழ்கிறது எனலாம்.

## உளத் தற்காப்பு இயங்குமுறைகள்

ஏற்க இயலாத உந்துதல்கள் அல்லது தூண்டுதல்களை அறிநிலையில் இருந்து அப்புறப்படுத்த மனிதன் முயலும் வகையில் தன்னியக்கமாகவும் தன்னியல்பாகவும் நனவிலி மனத்தால் திட்டப்படுத்தப்பட்ட பல வகையான உளம் சார்ந்த செயல்பாடுகளைத் தற்காப்பு இயங்குமுறைகள் என உளவியல் குறிப்பிடுகிறது. (Robert B. White, Robert M. Gilliland, Elements & Psychology, P-3). அதாவது உள்ளம் அடையும் துன்பத்தைக் களைவதற்கு மனிதன் மேற்கொள்ளும் முயற்சிகள் பலவாகும். துன்ப நீக்கமும் இன்பம் பெறுதலும் உயிரின் விழைவாகின்றது. அதற்காக மேற்கொள்ளும் செயற்பாடுகள் பலவாகும். அதாவது, ஒரு செலுத்துதல் செயல்பாட்டை அல்லது அதனோடு இயைந்த உணர்வின் பாதிப்பை அகம் ஆபத்தென உணர்ந்தறியும் போது மேற்கொள்ளும் செயற்பாடுகளே தற்காப்பு இயங்கு முறைகளாகும். இவை அறிநிலையோடு சேர்ந்தியங்காமல் தன்னியக்கமாகச் செயல்படுகின்றன என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் உரைக்கின்றது. (Encyclopeda Britanica Vol. 7, P. 171)

## புனையா ஓவியம் கடுப்ப

தலைவனைப் பிரிந்த தலைவி உளப்போராட்டத்தால் மிகு வாட்டமுறுகின்றாள். 'இன்னே வருகுவர் இன்துணையோர்' எனச் செம்முகச் செவிலியர் உரைப்பவும் தாளாது தவிக்கின்றாள்.

முன்னர் முத்தாரம் தாங்கிய மார்பகத்தில் குத்துதல் பொருந்திய நெடிய தாலி மட்டுமே இருக்கிறது; நெற்றியில் உலர்ந்த மயிர் வீழ்ந்து கிடக்கிறது; காதுகளில் மகரக் குழைகள் களையப்பட்டமையால், தோள்களில் காதுகள் படிந்து கிடக்கின்றன; பொன்னாலாகிய வளைகளை அணிந்த முன்கைகளில் சங்கு வளைகளும் காப்புநூல்களும் உள்ளன. வாளைமீனின் பிளந்த வாய் போன்ற மோதிரம் அணிந்த விரல் மோதிரமின்றி உள்ளது. பூ வேலைப்பாடு மிக்க ஆடை அணிந்திருந்த இடையில் தற்போது மாசுபட்ட ஆடை அணிந்து, வண்ணம் தீட்டப்படாத கோட்டோவியம் போன்று புனைவுகள் இன்றி தலைவி உள்ளாள் என்பதனை,

ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்துப்
பின் அமை நெடுவீழ்தாழ துணை துறந்து
நல்நுதல் உலறிய சில்மெல் ஓதி
நெடுவீர் வார்குழை களைந்தென. குறுங்கண்
வாயுறை அழுத்திய. வறிது வீழ் காதின்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கழகை நூல் யாத்து
வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்து
செவ்விரல் கொளீஇய செங்கேழ் விளக்க
பூந்துகில் மரீஇய ஏந்து கோட்டு அல்குல்
அம்மாசு ஊர்ந்த அவிர் நூற் கலிங்கமொடு
புனையா ஓவியம் கடுப்ப, ........... (நெடுநல். 136-147)

என ஆசிரியர் நக்கீரர் எடுத்துரைக்கிறார்.

ஒவ்வொருவரும் கவலை உண்டாக்கக் கூடிய சூழ்நிலைகளில் இருந்து விலகி அல்லது பின்னடைந்து செல்வதன் மூலம் அவரவர் உளப்போராட்டத்தினால் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க முயல்கின்றனர் என்பது உளவியல் முறைகளுள் ஒன்றாகும். (கலைக்களஞ்சியம் தொகுதி 10, ப. 306). அந்த வகையில் நெடுநல்வாடைத்தலைவி தனது மகிழ்வான சூழ்நிலை மற்றும் அணிகலன்களைத் துறந்து, தனது உளப்போராட்டத்தைத் தவிர்க்க முயல்கிறாள் எனலாம்.

**புனைவில் கோலம்**

உலக மக்களில் தமிழர்களைப் போல ஒப்பனைக்கு அணிகலன்களை மிகுதியாகப் பயன்படுத்தியவர்கள் வேறு எந்நாட்டவரும் இல்லை என்பர். (வரதராசன். வெ, தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன், ப.33). அவ்வகையில் சங்க காலத்தில் ஆடவர், மகளிர், அரசர், மக்கள், செல்வந்தர், ஏழை எனப் பல திறப்பட்டவர்களும் அணிகளைப் பூண்டு இலங்கினர். இதனை, பணக்காரர்கள் உயர் உலோகங்களாலும், இரத்தினங்களாலும் ஆன மதிப்புயர்ந்த நகைகளை அணிந்தனர். அத்தகைய வசதியில்லாதவர்கள் கூடக் கண்ணாடி மணிகளைக் கோர்த்தேனும் மாலைகள் அணிந்தனர் என்ற கருத்து அணி செய்கிறது. (சுப்பிரமணியன். ந. சங்க கால வாழ்வியல், ப.377)

நெடுநல்வாடைத் தலைவி, அரசனின் தேவி - அரசி! செல்வத்திலும் செல்வாக்கிலும் உயர்ந்த நிலையில் இருப்பவள்! தலைவன் பிரிவால் - அரசனின் பிரிவால் உளப் போராட்டத்தில் இருக்கிறாள்; ஒப்பனைகளற்று - அணிகள் பூணாது (ஓரிரு அணிகள் மட்டும் பூண்டு) - புனைவில்

கோலத்தில் இருக்கின்றாள். அதாவது மங்கல அணிகளான தாலியும் வளையும் மட்டும் அணிந்து ஏனைய அணிகளைத் துறந்து துயிலின்றி இருக்கிறாள். இவ்வாறான செயற்பாட்டினை "உடமையிலிருந்தும் கடமையிலிருந்தும் ஒருவர் விலகிச் சென்று விடுதல்" என உளவியல் பேசும். ( சிவராஜ். து. சங்க இலக்கியத்தில் உளவியல், ப. 128 ) அந்த வகையில் நெடுநல்வாடைத் தலைவி தனது உளப் போராட்டத்தைத் தவிர்ப்பதற்கான இயங்குமுறையாக அணிகளைக் களைந்த துறப்பமைவு நிலையில் உள்ளாள் எனலாம்.

நெடுநல்வாடைத் தலைவி ஒரு சில அணிகளைத் துறக்காமல் அணிந்திருக்கிறாள். முத்தாரமும் அணிந்திருக்கும் கழுத்தில் **தாலியும்,** பொன்தொடியாம் வளையலுக்கு மாற்றாகச் **சங்கு வளையும்** அணிந்துள்ளாள். அதாவது காதுகளில் மகரக்குழையும் கை விரல்களில் நெளி மோதிரமும் அணியாது தாலியும் வளையும் மட்டும் அணிந்துள்ளாள். இதற்கு **"மங்கலவணி தவிரப் பிறவணி பூணாத"** கற்புடை மகளிர் நெறி காரணமாகிறது எனலாம்.

அதாவது, தலைவனைப் பிரிந்த நிலையில் தலைவி உளப்போராட்டம் அடைகின்றாள். அந்தப் போராட்டத்தைக் குறைத்துக் கொள்ள ஒப்பனைகள் அற்று அணிகள் பூணாமல் உள்ள தற்காப்பு இயங்கு முறைகளை மேற்கொள்கிறாள்.

## தொகுப்புரை

நெடுநல்வாடையில் தலைவன் போர் காரணமாகத் தலைவியைப் பிரிந்து சென்றுள்ளான். பிரிவுத் துன்பம் தலைவியின் உளப்போராட்டத்திற்கான அடிப்படையாகின்றது. அதனைக் குறைப்பதற்கும் - தீர்ப்பதற்கும் தலைவி கைக்கொள்ளும் செயல்களை உளத் தற்காப்பு இயங்குமுறை என உளவியல் சுட்டுகிறது.

நெடுநல்வாடை எனும் பிரதியுள் தலைவிக்குத் தோழியரும் செவிலியரும் பலவாறு ஆறுதல் கூறியும், தலைவி **'புனைவில் கோலமாகத்'** தன்னிலையில் கலங்கித் தவிக்கிறாள். இப்புனைவில் கோலம் - மங்கலவணி தவிரப் பிற அணிகளைத் துறந்த கோலம் உளத் தற்காப்பு இயங்கு முறையாக இலங்குகிறது எனலாம்.

# கானல்வரியில் வாழ்த்தும் விளைவும்

**வ. சேகர்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

## முன்னுரை

வரிப்பாடல்கள் நாட்டினையும் நாட்டு மன்னனையும் வாழ்த்துவது மரபு (தெ.பொ.மீ.கானல்வரி.ப-232). சிலப்பதிகாரத்தில் திருப்பு முனையாக அமையும் கானல்வரியில் வாழ்த்தும் மரபு ஓர் உத்தியாகக் கையாளப்படுகிறது. கானல்வரியில் வாழ்த்துவதற்கான நோக்கத்தினையும் வாழ்த்தினை உளங்கொள்ளும் கருத்துப் புலப்பாட்டினையும், அதனால் ஏற்பட்ட விளைவினையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்மாகும்.

## கற்பின் திறம்

கோவலன் ஊடல் ஏற்பட்ட சூழலில் கற்பின் திறத்தை வலியுறுத்தும் விதமாகக் காவிரி ஆற்றினை வாழ்த்தும் போக்குக் காணப்படுகிறது. ஆற்றுவரிப் பாடல்களில் கோவலன் யாரை நினைத்து வாழ்த்தினான் என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. இக்கருத்து பல்வேறு நிலைகளில் நோக்கி ஆராயும் தன்மையுடையதாகும். ஊடலுக்குக் காரணத்தைத் தெளிவுறும் நிலையில் இதனை அறியலாம்.

ஊடலுக்குக் காரணத்தை அரும்பதவுரைகாரர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"அவனூடுதற்குக் காரணம் திருநாள் முடிதலான் வந்த வெறுப்பு, இவள் ஆடலிற் காலம் நீட்டித்தமையாலும் பலரும் இவளைப்பற்றி பார்த்தலிற் பொறாமையாலும் வந்த வெறுப்புமாம்" (சிலம் : ப-177) என்று மாதவியின் மேல் கோவலனுக்கு ஊடல் ஏற்படுதற்கான காரணத்தை எடுத்தியம்புகிறார்.

ஒருவர் மீது வெறுப்புணர்வு ஏற்படுகையில் மற்றொருவரின் அருமையும் மேன்மையும் அறிய இயலும் என்பது உளவியலார் கூறும் கருத்தாகும். இதற்கேற்ப மாதவியின் மீது ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகக் கண்ணகியின் கற்பின் திறமும் உளப்பண்பும் வெளிப்படுத்தும் மனநிலை கோவலனுடைய ஆழ்மனதில் எழுகிறது. அதற்குக் களமாக அமைந்து விடுகிறது. இதனை,

> "திங்கண்மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்சிக்
> கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய்வாழி காவிரி
> கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்
> மங்கைமாதர் பெருங்கற்பென் றறிந்தேன்வாழி காவிரி" (சிலம்: 7:2)

என்று பெருங்கற்பென்பது தனக்குரியவன் பிறரைப் புணர்ந்தாலும் புலவாதிருத்தலாகும். சோழ மன்னன் கங்கையைப் புணர்ந்தாலும் புலவாதிருத்தல் தன்மையால் காவிரியே வாழ்வாயாக என்று வெளிப்படையான வாழ்த்தாக இது அமைந்துள்ளது. ஆயினும் ஆழ்நிலையில் தான்பிறரைப் புணர்ந்தபோதும் தன்னைப் புலவாதிருக்கும் கண்ணகியின் பண்பினை வாழ்த்தும் கோவலனின் உட்குறிப்பு நோக்கற்பாலது. கோவலன் கயற்கண்ணாய் என்று விளிப்பது கண்ணகியைக் குறிப்பது என்பதை உணரலாம். இக்கருத்தினை வலியுறுத்தும் முகமாக அந்திமாலைச் சிறப்பு செய்த காதையில்,

"செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப (சிலம்: 4:53)

என்றும், கவுந்தியடிகள் கண்ணகியைக் குறிப்பிடும் போது,

"கயல்நெடுங் கண்ணி காதற் கேள்வ" (சிலம்: 10:76)

என்றும் இடம் பெறுகின்ற குறிப்புகள் நோக்கத்தக்கன.

கண்ணகியை நினைந்தே கோவலன் வாழ்த்தியதை இக்கூற்றுகள் புலப்படுத்துகின்றன. ஆனால் இச்சூழல் குறித்து கருத்துரைத்த ஆ. பழநி,

"கோவலன் தன்னைச் சோழனாகவும் மாதவியைக் காவிரியாகவும் எண்ணிப் பேசுகின்றான். அப்படியென்றால் கங்கையும் கன்னியும் யாராக இருக்க முடியும் பிற பரத்தையாரும் வயந்தமாலையும் ஆகத்தான் இருக்க முடியும்" (ப. 50) என்று சிலப்பதிகாரம் காப்பியக் கட்டமைப்பு நூலில் கோவலன் வயந்தமாலையை நினைந்தே வாழ்த்திப் பாடினான் என்ற கருத்தினைக் கொண்டு நிறுவுகிறார். இக்கருத்து காப்பியப் போக்கில் கண்ணகி கோவலன் மீண்டும் இணைவதற்குத் துணைசெய்வதாக இல்லை. கோவலன் கண்ணகி உறவை மேலும் விரிவுபடுத்துவதாக அமைகிறது.

## மாதவியின் உளப்பாங்கு

மாதவி கோவலனை "மன்னுமோர் குறிப்புண்டு இவன் தன்னிலை மயங்கினான்" என்று கூறுவதன் வாயிலாக உட்குறிப்பால் வேறொரு கன்னியை நினைந்தே பாடினான் என்பதையும் அக்கன்னி கண்ணகியும் அல்லள் என்ற கருத்தையும் புலப்படுத்துகிறாள்.

"கோவலன் பிற கன்னியரை அணைந்து வந்தாலும் மாதவியாகிய தான் புலத்தலாகாது எனக் கோவலன் தன் பரத்தமைக்கு உரிமை வேண்டியே பாடுகின்றான் என்பதாக மாதவி உணர்கிறாள்.

மாதவி பெண்ணுலகத்தின் பிரதிநிதியாகச் சீறுகிறாள். கோவலன் கூற்றிற்கு மறுப்புரையாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறாள்.

"கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லா நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை யறிந்தேன் வாழிகாவிரி"
(சிலம்: 7:1)

'பெண்களின் கற்பிற்குக் காரணமாக அமைவது கணவனின் புறத்தொழுக்கமின்மையே என்று மாதவி வலியுறுத்துகிறாள். காவிரி மேன்மையுடன் விளங்குவதற்கு "மன்னனின் செங்கோல் வளையாமை என்பதைக் கருத்துணர்ந்து நடந்தாய் வாழி காவிரி" என்று அவள் காவிரியைப் புகழ்கிறாள். ஒருவரின் புகழுக்குக் காரண காரியத்தோடு விளக்கும் பண்புடையவளாக மாதவி திகழ்கிறாள்.

பெண்களின் கற்புத் திறத்திற்கு அடிப்படையாக அமைவது புறவொழுக்கமில்லாத அறநிலையாகும். வளையாத செங்கோல் நாட்டைக் காப்பதோடு பெண்களின் கற்பையும் காப்பது என்ற கருத்தை வலியுறுத்தி கோவலனின் மனதில் பதியும் வண்ணம் காவரியை வாழ்த்துகிறாள். இக்கருத்தினையே,

"அருந்திற லரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது" (சிலம் : 28:207-208)

என்று சிலம்பும்,

"மாதவர் நோன்பு மடவார் கற்பும்
காவலன் காவலின்றெனி னின்றால்" (மணி : 22:208-209)

என்று மேகலையும் வலியுறுத்துகின்றன.

கோவலன் "புலவாதிருத்தல் பெருங்கற்பென்று வாழ்த்துகின்றான். மாதவி செங்கோல் வளையாமையே பெருங்கற்பென்று வாழ்த்துகின்றாள். இதனால் தம் கருத்தினை வெளிப்படுத்த வாழ்த்தினை ஓர் உத்தியாக இருவரும் கையாளுகின்றனர் என்பதை அறியலாம்.

## வளத்தின் திறம்

கோவலன் மாதவியிடம் கற்பின் திறத்தைச் சுட்டிக்காட்டிய நிலையில் வளத்தின் திறத்தினை எடுத்தியம்புவதற்கான காரணத்தை அறிய இயலுகிறது. கோவலன் வாழ்த்தும்போது,

"விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தவெல்லாம் வாய்காவா
மழவரோதை வளவன்றன் வளனேவாழி காவிரி" (சிலம் : 7:4)

என்று 'வளவனின் வளத்தினால் ஆரவாரமுடன் நடந்தாய் வாழி காவிரி' என்று வாழ்த்துகிறான். இவ்வாழ்த்தில் மாதவி உணரும் வகையில் தான் வளம் இழந்ததை உட்குறிப்பாகக் கோவலன் புலப்படுத்துகின்றான்.

தான்பொருள் இழந்ததைப் பின்னால் தன்மனைக்கு மீண்டும் வந்து கண்ணகியைச் சந்திக்கும்போது கோவலன் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

"சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த" (சிலம் : 9:69-70)

இதனால் தான் செய்த தவறுக்கு வருந்தும் கோவலன் மனநிலையை அறியலாம். கோவலன் வளத்தின் சிறப்பை முதன்மைப்படுத்துகையில் மாதவி அருளே சிறப்புடையது என்ற மனப்பான்மையில் காவிரியை வாழ்த்தும் இயல்பினை உணரலாம்.


"ஊழியுய்க்கும் பேருதவி யொழியாதொழுக லுயிரோம்பும்
ஆழியாள்வான் பகல்வெய்யோ னருளே வாழிகாவிரி" (சிலம் ; 7:3)

இங்கு "பகல்வெய்யோன்" என்பது சோழர்களின் சூரிய குலத்தைக் குறித்தமைகிறது. தலைவனின் அருள் தன்மையாலேயே பெண்களின் சிறப்பு மேன்மையுறுகிறது என்ற மாதவியின் உளக்குறிப்பினை இதனால் அறியலாம். இவ்வாறு கோவலன் பாடும் ஆற்றுவரிப் பாடல்களில் மரபான நாட்டினையும் நாட்டு மன்னனையும் வாழ்த்தும் நோக்கோடு கற்பின் திறத்தையும் வளத்தின் திறத்தையும் உள்ளீடாகக் கொண்டு வாழ்த்து அமைகிறது. இதே போன்று மாதவியின் ஆற்றுவரிப் பாடல்களில் மன்னனின் செங்கோல் வளையாமை. வேலின் திறம், அருள் போன்றவற்றால் பெண்களின் கற்பின் திறம் காக்கப்படுவதாக வாழ்த்து அமைகிறது. ஆனால் இருவர் வாழ்த்தும் ஒவ்வொருவர் மனதிலும் உள்ள உளக்கருத்தினைப் புலப்படுத்தும் உத்தியாக அமைந்து இருக்கிறது. அவ்வுத்தியும் வெளிப்படைப்பொருளோடு உட்பொருள் ஒன்றும் அமைந்து காப்பியச் சிறப்பினை மிகுவிக்கிறது.

## முடிவுரை

கானல்வரியில் வாழ்த்து ஓர் உத்தியாகக் கையாளப்படுகிறது. இவ்வாழ்த்து உட்குறிப்பால் உணரும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதைத் தெளியலாம். உளப்பண்பிற்கேற்ப வாழ்த்தினைப் புலப்படுத்தும் திறனும் புரிந்துணரும் தன்மையும் அறிய இயலுகிறது. கோவலன் உட்குறிப்பால் கண்ணகியை வாழ்த்தும் திறனும் மாதவி கோவலனிடம் வாழ்ந்த இன்பத்தைக் குறிப்பால் உணர்த்தும் திறனும் உணர்த்தலாகிறது. இருவரின் உளக்கருத்து பிறழ்வினால் வாழ்த்து பிரிவிற்கான விளைவை ஏற்படுத்துவதில் அடிப்படைக் காரணமாகிறது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய இயலுகிறது.

## உரப்பனூர்ச் செப்பேடு (சென்ற இதழில் வெளிவந்த கட்டுரை வாயிலாக வெளிக்கொணரப்பட்டது.



# தமிழர்கண்ட அரசியல், பொருளியல், குமுகவியல் கோட்பாடுகள்

முனைவர்.
**கா. அரங்கசாமி**
கோபிசெட்டிப்பாளையம்

## முன்னுரை

இன்றைய அரசியல் அடிப்படையில் பொருளியல், குமுகவியல் (சமூகவியல்) கோட்பாடுகள் அமைவதைக் காணலாம். அவற்றைக் காணும் போது மக்களின் நிலையும் அறியப்படும். எனவே தான் சங்ககால மக்களின் அரசியல், பொருளியல், குமுகவியல் கோட்பாடுகளை அறிய நாம் தொல்காப்பியம், சங்க இலக்கியம், (சிறப்பாகப் புறநானூறு), திருக்குறள் முதலான நூற்களில் இருந்து அன்றைய அரசியல், பொருளியல், குமுகவியல் கோட்பாடுகளை அறிதல் வேண்டும். இம்மூன்றையும் அறிதற்கு ஏன் முயல வேண்டும் என்ற வினாவொன்று நம்முன் எழும். இந்த மூன்றும் ஒன்றனை ஒன்று தழுவிச் செல்வதைச் சாமானியரும் அறிவர். இன்றைய அரசியல் போன்று அன்று இருந்ததா என்பதையும் நாம் அறிதல் வேண்டும். அன்றைய மக்கள் இயற்கை நெறியுடன் அறம் போற்றிய பாங்கினை நாம் மேற்கூறிய மூன்று வகைப்பட்ட நூற்களாலும் அறிதல் கூடும். எனவே இன்றுள்ள வாழ்க்கைச் சிக்கல் அன்று இல்லை என்பதையும் இன்றைய வாழ்க்கையே எதிர்நீச்சல் வாழ்க்கை என்பதையும் நாம் மறத்தல் கூடாது. எனவே திருவள்ளுவர் உள்ளம் அறிய இந்த மூன்றையும் அறிய முயல வேண்டும். இன்றைய அரசியல் அன்று இல்லை என்று முன்னர்க் குறித்தோம். இன்று குடியரசு (மக்கள் தங்களை ஆழ்வோரைத் தேர்ந்தெடுக்கும் அரசு), அன்று முடியரசு (மன்னர்கள் வாரிசு அடிப்படையில் ஆளவருவர்). இன்றைய குடியரசிலும் பல குறைகள் உள்ளன. அன்றைய முடியரசிலும் பல குறைகள் இருந்தன. அரசியலே அனைத்தையும் ஆட்டிப்படைக்கும் ஆற்றல் மிக்கது என்றும் முன்னர்க் குறித்தோம். எனவே அன்றைய அரசியல் அடிப்படைகளைத் தொல்காப்பியம், புறநானூறு, திருக்குறள் வழிக் காண்பதே நம் நோக்கம். அவற்றைக் கீழே காண்போம்.

## தொல்காப்பிய அரசியல், பொருளியல், குமுகவியல்

தொல்காப்பியர் நேரடியாக மேற்கூறியவற்றைக் கூறவில்லை. இலக்கணம் செய்யும் போது (அன்றைய வாழ்க்கை இலக்கணம்) மேற்கூறியவற்றைக் கூறுவர். எனவே தொல்காப்பியர் வாழ்க்கை

இலக்கணம் கூறும் போது கூறிவனவற்றை நாம் தொகுத்துக் கொண்டோம்.

1. வேந்தன் கட்டளை ஏற்றுப்பிரிதல் (978)
2. ஓதற் பரிசு (977)
3. மனைவியுடன் கடல் கடந்து செல்லல் கூடாது (981)
4. பொருள் தேடல் உண்டு (973-975)
5. புறத்திணையால் அறியும் போர் முறைகள் (1002 முதல்)
6. அறப்போர் மற்றும் மறப்போர் (1002 முதல்)
7. அறிவர் தம் செல்வாக்கு (1100)
8. அந்தணர் (தூயதுறவியர்) பார்ப்பார் (தமிழ்மக்கள்) செயல்
9. மூத்தோர் இறையோர் செயல்
10. போர்க்களக் காட்சிகள் (புறத்திணை)
11. கூத்தர், பாணர், முதலானோர் செயல்
12. உழைக்குறும் தொழில் வல்லோர் (1117)
13. தலைவர் தம் கலக்கம் (1118)
14. அறவியல் வாழ்க்கை என்ற கோட்பாடு (பொருளதிகாரம்)
15. "காமம் சான்ற கடைக் கோட்காலை" என்ற நூற்பாவில் "சிறந்தது பயிற்றல்" என்று கூறுவதால் அறியும் மெய்யறிவுத்திறம் (1138)
16. பொருளியல் என்னும் பகுதி கூறும் செய்திகள் (1141 முதல்)
17. நட்பும் பெண்களின் நாணம் பற்றியும் கூறுவன (1146)
18. அறத்தொடு நிற்றல் (1153)
19. செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் ஆண்மையும் பெண்பாலான (1155) என்று பெண்களின் சிறப்புக் கூறும்திறம்.
20. பொருட்படுத்த வேண்டிய யாவும் பொருள் என்று கூறும் உயரிய பாங்கு (பொருளியல்)
21. வாழ்க்கையை இலக்கணப்படுத்திய சிறப்பு (அகம், புறம், களவு, கற்பு)
22. "எல்லா யுயிர்க்கும் இன்பம்" என்ற சமநிலைக் கருத்து (1169)
23. கல்வி, தறுகண், இசைமை, கொடை எனச் சொல்லிய பெருமிதம் நான்கு என்று வகுத்துக்கூறும் சிறப்பு (1203)
24. இருவருக்கும் (ஆண்,பெண்) உள்ள ஒப்புமைகள் கூறும் சிறப்பு "பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு" எனத்தொடங்கும் நூற்பா (1219)

25. செவியுறை கூறும் பண்பு (1385, 1371)
26. அங்கதம் கூறும் திறம் (1381, 1386)
27. வாழ்த்தும் பகுதி (1417)
28. நூலாக்கம் பற்றிய நுண் செய்திகள் (1421, 1422)
29. முதுமொழிகள் பற்றிய சிறப்புக்கூற்று (1433)
30. அளவையியல் (தருக்கவியல்) பற்றியன (1440)
31. ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே எனத் தொடங்கும் நூற்பாவில் இயல்புக் கோட்பாடும் இயற்கை நுட்பமும் (1456)
32. பொருள் வகை பற்றிய திட்டம் (1464)
33. மரபியல் கூறும் திறம் (1500 முதல் 1618 வரை)
34. உயிர்களின் அறிவு சான்ற பாகுபாடு (1526)
35. மாவும் மாக்களும் பற்றிய பாகுபாடு (1531)
36. உலகத் தோற்றம் பற்றிய அறிவியல் செய்திகள் (1589)
37. நூலாக்கம் பற்றியன (1593-1594)
38. நூலின் குற்றங்கள் (1608)
39. நூலாக்க உத்திகள் (1610)
40. ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம் (813) என்று ஆய்வாளர்தம் திறம் கூறும் திறம்.
41. பெண்ணியக் கோட்பாடு, களவு, கற்பு இயல்புகளில் ஆண், பெண் இயல்புகள் வரையறை செய்யக் காண்க.
42. உரிமைமிக்க கோட்பாடுகள் - யாவருக்கும் ஒத்த உரிமை பற்றிய செய்திகள் (களவியல், கற்பியல்)
43. ஆய்வு நூல் பற்றியன (813)
44. மெய்யறிவு பற்றியன (813, 1421, 1427)
45. நாடகம், உலக வழக்கு பற்றியன (999)
46. மாந்த உணர்வுகள் (மெய்ப்பாட்டியல்)
47. உலகம் பற்றியன (பொருளதிகாரம்)

இவ்வாறு தொல்காப்பிய வழிக்காணும் அரசியல், பொருளியல், குமுகவியல் கோட்பாடுகளை நாம் மேலே கண்டோம். இவற்றை பிரித்து ஆய்ந்தால் தனி நூலாகும் என்பதால் இதனை இவ்வளவுடன் நிறுத்தி மேற்செல்வோம்.

## சங்க கால இலக்கியம் - சிறப்பாகக் கூறும் அரசியல், பொருளியல், குமுகவியல் பற்றிய செய்திகள்

புறநானூற்றுப் புலவர்கள் நன்மதிப்பு மிக்கவர்கள். மன்னர்கள் புலவர் வழிப்பட்டனர் என்பதால் அரசு செம்மையில் நடந்தது. அதற்கான மேற்கோள்கள் சிலவற்றைக் காண்போம்.

1. அருளும் அன்பும் நீக்கி நீங்கா
   நிரயம் கொள்ப ரோடு ஒன்றாது, காவல்
   குழவி கொள்பவரின் ஓம்புமதி (புறம்-5)
2. பரிசில் மாக்கட்டு வரிசையின் நல்கி (புறம் 6) என்பதால்
   தமது தகுதி பார்க்கும் புலவர்தம் நிலை அறியப்படும்..
3. எம் அம்பு கடிவிடும் நும் அரண் சேர்மின் (புறம்-9) என்னும்
   பாடல் போர் அறம்பற்றிக் கூறிடக் காண்க.
4. "கொடி கடிந்து கோல்திருத்தி" (புறம் 17) ஆண்டனர் மன்னர்கள்
   என்பதால் மக்கள் நலம்பெற்றனர்.
5. நிலன்நெளி மருங்கின் நீர் நிலைபெருகத்
   தட்டோர் அம்ம இவண் தட்டோரே (புறம் 18) என்பதால்
   மன்னர்கள் ஏரி, குளம் உருவாக்கிப் புகழ் பெற்றனர்.
6. அறம் துஞ்சும் செங்கோலையே (புறம் 20)
7. புலவர் பாடும் புகழ் உடையோர் (புறம் 27) என்பதால்
   அன்றைய மன்னர்தம் மக்கள் கடன் பற்றி அறியலாம்.
8. "செஞ்ஞாயிற்றுச் செலவும்............சென்று அறிந்தோர்" (புறம் 30)
   என்பதால் அன்றைய அறிவுத்திறன் மிக்கவர் போற்றப்பட்டது
   அறியப்படும்.
9. சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும் அறத்துவழிப்படூஉம்
   (புறம் 31) என்பதால் பொருளியல் குமுதாய இன்பம் அறியப்படும்.
10. "நிலம்புடை பெயர்வது ஆயினும்..................அறம்பாடிற்றே"
    (புறம் 34) என்ற பாடல் வாழ்வியல் உண்மை கூறிடக்காண்க.
11. "காவலர்ப்பழிக்கும்" (புறம் 35) என்ற உணர்வுடன் அரசர்
    இருந்தனர் என்பதால் அன்றைய அரசியல் அறியப்படும்.
12. அறநெறி முதற்றே அரசின் கொற்றம் (புறம் 55) என்பதால்
    அறத்துக்குத் தந்த மதிப்பு அறியப்படும்.

13. அறவிலைவணிகன் ஆய்சுல்லன் (புறம் 134) என்பதால் அன்றைய மன்னர்தம் நிலை அறியப்படும்.

14. வாழ்தல் வேண்டிப் பொய்கூறேன் மெய்கூறுதல் (புறம் 139) என்று உரைப்பதால் குமுகநிலை புலப்படும்.

15. நின் நயந்து உறை நர்க்கும்.................................... எல்லோருக்கும் கொடுமதி (புறம் 163) என்னும் பாடல் மனிதநேயம் காட்டுவதுடன் குமுகநிலையும் காட்டும்.

16. உண்டால் அம்ம..................இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே...................
உலகுடன் பெறினும் கொள்ளலர்..............
பிறர்க்கென முயலுநர் உண்மையானே (புறம் 182) என்னும் பாடலால் பிறர் நலம் கருதும் மாண்பு புலப்படும்.

17. கற்றல் நன்றே (புறம் 183), மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம் (புறம் 186) என்பதால் அக்கால அரசியல் புலப்படும்.

18. "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழிநல்லை" (புறம் 187) என்பதால் உலகியல் நிலை உணரப்படும்.

19. உண்பது நாழி........பிற தம் எல்லாம் ஓர்ஒக்குமே (புறம் 189) உலகியல் உண்மை நிலை காட்டும் பாடல் அடியாகும்.

20. யாதும் ஊரே யாவருங்கேளிர் (புறம் 192) உலகப் புகழ்பெற்ற தொடர் ஆகும்.

21. ஓர் இல் நெய்தல் கறங்க..................இன்னாதம்ம இவ்வுலகம் இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே (புறம் 196) என்ற பாடல் இயல்புக் கோட்பாடு கூறும்.

22. நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின் (புறம் 195) அன்றைய வாழ்க்கை காட்டும் பாடல்.

23. ஈயென இரத்தல் இழிந்தன்று................கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று (புறம் 204)-என்பதால் அன்றைய குமுகநிலையைக் காணலாம்.

24. "யானை தந்த முளிமர விறகின்" என்ற பாடல் (புறம் 247) மாந்த நிலை மாறுபடுவதைக் காட்டும்.

25. ஓவத்தன்ன இடன்உடை வரைப்பு (புறம் 251) அக்காலக்கட்டிடம் காட்டும்.

26. தில்லை அன்ன புல்லென் கடையொடு....................இல்வழங்கு மடமயில் பிணிக்கும்........................(புறம் 252) என்ற பாடல் மாந்தன் பெற்ற உயர்நிலை காட்டும்.

27. மூதின்முல்லைத் துறைப்பாடல்கள் பெண்களின் வீரம் காட்டும் வழிபாட்டு நிலை அறியப்படும்.

28. கள்ளி நீழல் கடவுள் வாழ்த்தி (புறம் 260) என்ற பாடல் வாயிலாக வழிபாட்டு நிலை அறியப்படும்.

29. கள்ளின் வாழ்த்தி.................(புறம் 316) என்னும் பாடல் அக்கால மக்கள் உணர்வு நிலை காட்டும்.

30. "இன்னா வைகல் வாராமுன்னே செய் நீ முன்னிய வினையே" (புறம் 363) என்ற அறிவுரை என்றும் உண்மையாகும்.

31. உண்டும் தின்றும் மகிழ்வம் (புறம் 364) என்ற பாடல் அக்கால குமுகநிலை உணர்த்தும்.

33. புலிப்பல் தாலிப்புண் தலைசிறார் (புறம் 374) என்ற பாடல் உலகியல் உண்மை கூறும்.

34. "பாடுஇல் மன்னரைப் பாடன்மார் எமரே" (புறம் 375) என்னும் பாடல் புலவர்தம் மதுகை உணர்த்தும்.

35. புறம் 376ஆம் பாடல் மன்னர்தம் கொடைமடம் காட்டும்.

36. புறம் 378ஆம் பாடல் தொன்மம் காட்டுவதுடன் பரிசு பெற்ற பாணர் நிலையும் காட்டும்.

37. தேட் கடுப்பன்ன நாட்படு தேறல் (புறம் 392) என்ற பாடல் அவர் தம் வாழ்வியல் நிலை உணர்த்தும். இவ்வாறு புறப்பாடல்கள் அக்காலச் (சங்ககால) சமூகத்தில் அரசர் காட்டிய அரசியல், அதனால் ஏற்பட்ட பொருளியல், குமுகவியல் நிலைகளை நமக்குக் காட்டும்.

## திருக்குறள் காட்டும் அரசியல், பொருளியல், குமுகவியல் நிலைகள்

திருக்குறள் காட்டும் அரசியல், பொருளியல், குமுகவியல் யாவும் அறத்தின் அடித்தளத்தில் அமைந்தவை என்பதை முன்னர்க்கூறிய கட்டுரைகளால் எடுத்துக் காட்டினோம்.

2. அறத்துப்பால் குறிப்பாக அறன் வலியுறுத்தல் இல்லறம், துறவறம் யாவும் அற அடிப்படை காட்டுவன.
3. அரசியல், பொருட்பால் இறைமாட்சி முதல் ஆள்வினையுடைமை வரையிலும் அமைச்சியனும் அற அடிப்படை காட்டுவன.
4. பின்னர் வரும் நட்பியல் குடியியல் (குடிமை முதல் குடிசெயல்வகை) ஈறாகவும் காமத்துப்பாலும் குமுகவியல் கூறுவன. *கயமை அதிகாரம் நல்குரவு பற்றிய செய்திகள் குமுகம் காட்டும்* அளவின. எனவே திருக்குறள் காட்டும் அரசியல், பொருளியல், குமுகவியல் யாவும் அறத்தின் அடித்தளம் கொண்டவை என்பதை யாவரும் அறிவர். (இச்செய்தி பற்றி முன்னர்ப் பல கட்டுரைகள் வந்துள்ளன).

## முடிவுரை

திருக்குறளில் தோற்றக்களம் அறியப் பழந்தமிழர்தம் அரசியல், பொருளியல், குமுகவியல் அறிதல் வேண்டும். அறிவதற்குத் தொல்காப்பியம், சங்க இலக்கியம் (சிறப்பாகப்புறம்), திருக்குறள் கூறும் அரசியல், பொருளியல், குமுகவியல் ஆகியவற்றை அறியமுற்பட வேண்டும். அவ்வாறு அறிந்தவற்றைத் தொகுத்திடக் கீழ்க்காணும் கோட்பாடுகள் நமக்குக் கிடைக்கும். அவையாவன,

1. அவர் வாழ்வின் அடித்தளம் அறம்
2. இயற்கை இன்ப நெறியே அவர்தம் நெறி
3. இன்ப நாட்டம் வாழ்வின் முதல்நிலை
4. மன்பதையில் அன்று பணநாட்டம் இல்லை
5. எளிமை இனிமை நிறைந்தது அன்றைய வாழ்க்கை
6. மன்னர் அறம்போற்ற மக்களும் போற்றினர்.

எனவே அன்றைய அரசியல், பொருளியல், குமுகவியல் யாவும் அறத்தின் அடிப்படையில் சமச்சீர் போற்றின. மேலும் எளிமை இனிமை இன்பநாட்டம் வாழ்க்கையின் அடித்தளம் என்பதையும் நாம் அறியலாம்.

# அடிகளாசிரியரின் தொல் - சொல் - ஆழ்நோக்குப் பதிப்பு

**ஆ. அருள்மணி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அண்ணாமலை பல்கலைக்கழகம்

## முன்னுரை

தமிழுக்காகத் தம்வாழ்நாள் முழுவதையும் செலவிட்டவர் மூதறிஞர் தொல்காப்பியர் செம்மல் அடிகளாசிரியராவர். தமிழ்மீது கொண்ட பற்றினால் குருசாமி என்ற இயற்பெயரை அடிகளாசிரியர் என மாற்றிக் கொண்டார். இந்தியக் குடியரசுத் தலைவரிடம் (2010) தொல்காப்பியர் விருதைப் பெற்ற முதல் அறிஞர். நூற்றிரண்டு அகவையில் இந்தியன் ஏர்லைன்சு விமானத்தில் பயணம் செய்த முதல் இந்தியத் தமிழர் என்னும் பெருமைக்குரியவர். இல்லத்தில் இருந்தபடியே நூற்றிரண்டு வயதில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதியுதவியுடன் தொல்காப்பிய ஆய்வினை நிகழ்த்திய முதல் சாதனையாளர்.

இருபத்தாறுவயதில் பதிப்புப் பணியைத் தொடங்கிய அடிகளாசிரியர் வாழ்நாள் இறுதிவரை (102 வயது) அப்பணியைத் தனிச்சிறப்புடன் செய்தவர். இவர் பதிப்பித்த முதல் நூல் (1936) வீரசைவப்பிரமாணம். இறுதியாக உரை எழுதிய நூல் (2012) திருமந்திரச் சொற்பொருளுரை. இந்நூலை அடிகளாசிரியரின் மறைவுக்குப் பின் அவரது இளைய மகன் அ. சிவபெருமான் பதிப்பித்துள்ளார். இவர் பதிப்பித்த சொல்லதிகாரப் பதிப்பை ஆழ்நோக்குடன் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தொல் - சொல் - பதிப்பு உருவான நிலை

அடிகளாசிரியர் தமிழிலக்கண நூல்களை ஆழ்ந்து படித்து அவற்றுள் பல பிழைகள் இருப்பதைக் கண்டறிந்து இலக்கண நூல்களில் காணப்படும் பிழைகள் என்று கட்டுரை எழுதினார். இக்கட்டுரையே தொல்காப்பியப் பதிப்புகள் உருவாகக் காரணமாக அமைந்தது. மேலும், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம் கொடுத்த ஊக்கத்தால் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்து ஓலைப்பிரதி ஒன்றினையும், திருவாடுதுறை ஆதினத்து ஓலைப் பிரதி ஒன்றினையும், 1987 வரை அச்சில் வந்த பிரதிகளையும் வைத்து இப்பதிப்புப் பணியைத் தொடங்கினார். இவருடைய பதிப்புகள் யாவும் ஓலைச்சுவடியைப் பார்த்து ஒப்பிட்டு உருவாக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கதாம். இதனால் இவர் பதிப்புகள் நம்பகத்தன்மையுடன் விளங்குகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் இணைப்பேராசிரியராக

இருந்தமையால், ஓலைச்சுவடிகளையும் பல இலக்கண இலக்கிய அச்சுப் பிரதிகளையும் ஒப்பு நோக்கி ஆய்வதற்கு வாய்ப்பாக அமைந்தது.

## பதிப்புமுறை

சொல்லதிகாரப் பதிப்புக்கு இலக்கணக் கொத்து, இறையனார்-களவியல், யாப்பருங்கலம், நம்பி அகப்பொருள், நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம் முதலான இலக்கண நூல்களைப் பயன்படுத்தியுள்ளார். அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, களவழிநாற்பது, குறிஞ்சிப்பாட்டு, குறுந்தொகை, சிந்தாமணி, சிவஞானபோதம், சிலப்பதிகாரம், சிறுபஞ்சமூலம், திருக்குறள், திருக்கோவையார், நற்றிணை, நாலடியார், நெடுநல்வாடை, பதிற்றுப்பத்து, புறநானூறு, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், முத்தொள்ளாயிரம் எனும் இலக்கிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார்.

இளம்பூரணர் உரை, சேனாவரையர் உரை, தெய்வச்சிலையார் உரை, நச்சினார்க்கினியர் உரை, கல்லாடர் உரை எனும் ஐந்து தொல்காப்பிய உரைகளையும் மயிலைநாதர் உரை, சங்கரநமச்சிவாயர் உரை எனும் இரு நன்னூல் உரைகளிலிருந்தும் விளக்கங்களைக் காட்டியுள்ளார். முன்பு கூறியபடி இரண்டு ஓலைச்சுவடிகளையும் பிங்கலம், திவாகரம் எனும் நிகண்டுகளையும் பதிப்பாய்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

## நூலின் அமைப்பு

அடிகளாசிரியரின் சொல்லதிகாரப் பதிப்பு நூல் 503 பக்கங்களைக் கொண்டு விளங்குகின்றது. பதிப்பாசிரியர் உரை ஐந்து பக்கத்திற்கு உள்ளது. 87 சொற்களுக்குச் சுருக்கக் குறியீட்டு விளக்கம் தரப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல், எச்சவியல் என்றுகொடுக்கப்பட்டுள்ளன, அடுத்து நூற்பா சொல்லகராதி, உரைப்பொருள் அடைவு, உதாரண மேற்கோள் அகராதி, நூற்பா முதற் குறிப்பகராதி என்ற வரிசையில் நூல் பதிக்கப்பட்டுள்ளது.

"தொல் - சொல்லுக்கும், தொல் பொருள் - செய்யுளியலுக்கும் நூற்பா சொல்லகராதி தந்துள்ள பதிப்பாசிரியர் இவர் ஒருவரே என்பது சுட்டத்தக்கது" என்கிறார் ச.வே.சு.

"இப்பதிப்பில் முப்பத்தொரு விழுக்காடு (31%) நூற்பா சொல்லகராதி உதாரண மேற்கோள் அகராதி இடம் பெற்றுள்ளது. இதுவே இப்பதிப்பின் சிறப்பு என்கிறார் அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்புகள் எழுதிய அ. சிவபெருமான். இவர் அந்நூலில் சொல்லதிகாரப் பதிப்பு வரலாறு, பதிப்பு முறைகள், உரை உத்திகள், பாடவேறுபாடுகள், நயங்கள், ஒப்பீடுகள், பதிப்பின் சிறப்புகள் ஆகியன பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதனால் ஆழ்நோக்குப் பதிப்புக்கான சான்றுகள் மட்டும் இவ்விடத்தில் விளக்கப்படுகின்றன.

## ஆழ்நோக்குப் பதிப்பு

நூற்பா சொல்லகராதி, அரும்பத அகராதி, உரைப்பொருள் அடைவு, உதாரண மேற்கோள் அகராதி எனப் பதிப்பு நெறிமுறைகளைக் கையாள்வதோடு மூலச்சுவடிகளை ஒப்பு நோக்கி ஆய்ந்து பதிப்பித்தல் ஆழ்நோக்கு பதிப்பு எனப்படும். ச.வே.சு.எழுதிய தொல்காப்பியப் பதிப்புகள் என்னும் நூலில் ஆழ்நோக்குப் பதிப்புகளாக அடிகளாசிரியர் பதிப்பினைக் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியர் பதிப்புகள் சில ஆழ்நோக்குரியன. அவை,

1. எஸ். கனகசபாபதி பிள்ளைப்பதிப்பு
2. அடிகளாசிரியர் பதிப்பு
3. யாழ்ப்பாணம் கணேசையர் பதிப்பு
4. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் பதிப்பு
5. மே.வீ. வேணுகோபால்பிள்ளைப் பதிப்பு
6. உரைவளப்பதிப்பு

என்பன என்கிறார். "மேலும் பல்துறை அறிவும் இவருக்கு இருந்தமையால் இவர் பதிப்புகள் மூன்றும் ஆழ்நோக்குப் பதிப்புக்களாகவே அமைந்துள்ளன" என்று மதிப்பீடு செய்கிறார்.

## நூற்பா சொல்லகராதி

நூற்பா சொல்லகராதி தொகுப்பது அவ்வளவு எளிதான செயலல்ல. நூற்பாவின் ஒவ்வொரு சொல்லையும் எடுத்து அகரவரிசைப்படுத்த வேண்டும். அதில் ஓரெழுத்துச் சொற்கள் முதல் ஒரு வரிசையில் அமைந்த சொற்கள் வரை வரலாம். நூற்பாவின் சொல், அதனையடுத்து நூற்பா எண் சொல்லானது நூற்பாவில் இடம் பெற்றுள்ள இடம் (வரி) இவற்றினை மிக கவனமுடன் அரிதின் முயன்று தொகுத்துள்ளார். சான்றாக, 'அ' என்ற சொல் 64 நூற்பாக்களில் 70 இடங்களில் வந்துள்ளதை அடிகளாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வாறாகப் பிற

சொற்களுக்கும் நூற்பா சொல்லகராதிக் கொடுத்துள்ளார். இச்சொல்லகராதி எண்பது பக்க அளவில் உள்ளது.

## உரைப்பொருளடைவு

அடிகளாசிரியரவர்கள் இளம்பூரணர் உரையிலும், தான் குறித்துள்ள உரை குறிப்புப் பகுதியிலும் உள்ள முக்கிய உரைப் பொருள்களை அகரவரிசைப்படுத்தித் தந்துள்ளார். இதில் 377 சொல்லுக்கு 17 பக்கத்தில் உரைப்பொருளடைவு கொடுத்துள்ளார்.

(எ.கா.)

1. இளம்பூரணர் தரும் உரைப்பொருள்
   பெயரெச்சம் பெயர் கொண்டு முடியும், 427.
2. அடிகளாசிரியர் தரும் உரைப்பொருள்
   பெயர்வினை கொண்டாற் பால்தோன்றும், 168.

## உதாரண மேற்கோள்

இளம்பூரணர் காட்டும் உதாரண மேற்கோள்களைத் தொகுத்து 55 பக்கத்திற்குக் கொடுத்துள்ளார். இதில் 1453 உதாரண மேற்கோள்கள் காணப்படுகின்றன.

## நூற்பா முதற்குறிப்பகராதி

நூற்பா முதற்குறிப்பகராதி 8 பக்கத்திற்குத் தந்துள்ளார்.

## முடிவுரை

நூற்றாண்டுக்கு மேல் வாழ்ந்த அடிகளாசிரியரின் பதிப்புப் பணி போற்றத்தக்கது. எழுத்தெண்ணிக் கற்ற புலமையினால் இவ்வரியப் பதிப்பினை உருவாக்கியுள்ளார். இக்காரணங்களால் அடிகளாசிரியரின் சொல்லதிகாரப் பதிப்பை(ஆய்வு) ஆழ்நோக்குப் பதிப்பு எனக்கூற முடிகிறது. இப்பதிப்பு ஆராய்ச்சியாளர்களுக்கு முதன்மைப் பதிப்பாக விளங்குகின்றது. தொல்காப்பியம் மட்டுமல்லாமல் தமிழ் இலக்கியம் கற்பவர் ஒவ்வொருவரும் அடிகளாசிரியரின் பதிப்பினைக் கையில் வைத்திருப்பது பயன்பெறத்தக்கதாகும். அடிகளாசிரியர் பதிப்பித்த தொல் - சொல்லதிகாரப் பதிப்பை ஆழ்நோக்குப் பதிப்பாகக் கொள்ளலாம் என்பதில் கருத்து வேறுபாடில்லை. மேலும், அதற்குரிய பல தரவுகளைத் திரட்டி ஆய்வு செய்வது ஆய்வாளர் பணியாகும்.

# திருக்குறளில் கனிமலர்

**ஆறுவிரல் ஐம்பொறி**

செம்மொழியாம் செந்தமிழ் மொழி, பிஞ்சு கனியாகும் வரையிலுள்ள வளர்ச்சி நிலைகளை ஏழு பருவங்களாகப் பகுத்துத் தனித்தனிப் பெயரிட்டு வழங்கியுள்ளது. அவற்றைக் காண்போம்.

1. பிஞ்சு - முதலில் தோன்றியது. 2. வடு - பிஞ்சு சிறிது முற்றிய நிலை (குற்றம் என்ற பொருளும் உண்டு) 3. கருக்காய் - வடு முற்றிய நிலை, 4. காய் - வளர்ச்சி முற்று பெற்ற நிலை 5. செங்காய் - பசுமையும் மஞ்சள் வண்ணமும் கலந்த நிலை, 6. கனி - முழுவதும் பழுத்த (மஞ்சள் வண்ண) நிலை, 7. பழம் - பழுத்து கொம்பிலிருந்து வீழ்ந்த நிலை.

இவ்வேழு பருவங்களில் நான்கு பருவங்களின் பெயர்களைப் பொய்யா மொழி குறட்பாக்களில் பயன்படுத்தியுள்ளார். அவற்றைக் குறட்பா எண்களுடன் காண்போம்.

1. கனியும் கருக்காயு மற்று - 1306.
2. காய் கவர்ந் தற்று - 100.
3. காழில் கனி - 1191.
4. பழுத் தற்று - 1008.

செம்மொழியாம் செந்தமிழ் மொழி, அரும்பு செம்மலாகி உதிரும் வரையிலுள்ள வளர்ச்சி நிலைகளை ஏழு பருவங்களாகப் பகுத்துத் தனித்தனிப் பெயரிட்டு வழங்கியுள்ளது. அவற்றைக் காண்போம்.

1. அரும்பு - முதலில் தோன்றியது. 2. மொட்டு - அரும்பு முற்றிய நிலை 3. போது - ஓரிதழ் சிறிது விரிந்த நிலை. 4. மலர் - பாதி இதழ்கள் விரிந்த நிலை (அம்பல்) 5. அலர் - அனைத்து இதழ்களும் விரிந்த நிலை. (வாசம் பரவும் நிலை. வதந்தி என்ற பொருளும் உண்டு. 6. பூ - (வீ) ஓரிரு இதழ் வாடிய நிலை. 7. செம்மல் - அனைத்து இதழ்களும் வாடிய நிலை. (உதிரும் நிலை).

இவ்வேழு பருவங்களில் ஐந்து பருவங்களின் பெயர்களைப் பொய்யாமொழி குறட்பாக்களில் பயன்படுத்தியுள்ளார். அவற்றைக் குறட்பா எண்களுடன் காண்போம்.

1. காலை அரும்பி - 1227.
2. முகைமொக்குள் - 1274.
3. போதாகி - 1227.
4. நறுமலர் - 1231.
5. கோட்டுப்பூ - 1313.

அரும்பின் வளர்ச்சி நிலைகளையும் பிஞ்சின் வளர்ச்சி நிலைகளையும் நோக்கும்போது தமிழரின் உற்று நோக்கும் பண்பையும் நுண்ணிய பகுத்தறிவையும் சொற்பெருக்கத் திறனையும் அறியமுடிகிறது.

# வள்ளுவரின் மருத்துவச் சிந்தனைகள்

**வை. ஸ்ரீதர்**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
கணேசர் கலை அறிவியல் கல்லூரி

## முன்னுரை

மனித வாழ்வியலுக்குச் சிறந்த அறிவுரைகளோடு மனித உடல் சார்ந்த நோய்களுக்கும் தீர்வு கண்டவர் வள்ளுவர். 'மருந்து' என்ற அதிகாரத்தின் வழி நோயற்ற வாழ்வு வாழ பல்வேறு மருத்துவச் சிந்தனைகளை ஆராய்ந்துள்ளார் திருவள்ளுவர்.

## மருத்துவம்

மருத்துவம் என்பதற்கு 'பரிகரிப்பு', 'வைத்தியம்' என்றும், 'அமுதம்' என்றும் கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி பொருள் கூறுகின்றது. மேலும், நோய்க்கான காரணத்தைக் கண்டறிதலையும், நோயைக் குணப்படுத்தலையும் நோக்கமாகக் கொண்ட சோதனை முறையிலான வழிமுறை என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பொருள் தருகின்றது. இவற்றின் வழி நோயைக் குணப்படுத்துதலும் நோய்க்கான காரணத்தைக் கண்டறிதலும் மருத்துவம் என்பதை உணர முடிகின்றது.

## இலக்கியங்கள் உணர்த்தும் மருத்துவம்

மனிதன் தோன்றிய பொழுதே நோயும் தோன்றி விட்டது எனலாம். நோயின் தன்மையை உணர்ந்த பொழுது மருந்தும் மருத்துவமும் கண்டறியப்பட்டன எனலாம். காலமாற்றத்திற்கு ஏற்பவும், அறிவின் வளர்ச்சிக்கு ஏற்பவும் மருத்துவம் வளர ஆரம்பித்தது.

சங்க காலத்தில் மருத்துவன் தாமோதரனார் என்பவர் மருத்துவத்தில் சிறந்து விளங்கியுள்ளதைச் சங்க இலக்கியம் காட்டுகின்றது. சிலப்பதிகாரம் மருத்துவம் தொடர்பான 32 ஓமாலிகைகள் பற்றிய செய்தியைக் கூறுகின்றது. அறுவை சிகிச்சை முறையினைக் கம்பர் தம்காப்பியப் பாடலில் பதிவு செய்துள்ளார்.

உடலிடைத் தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர் - கம்பராமாயணம்

பெரும்புண்களைத் தைக்கும் மருத்துவமுறை பற்றிப் பதிற்றுப்பத்து விளக்குகின்றது.

சிரல் பெயர்ந்தன்ன நெடுவள் ஊசி
நெடுவசி யிரந்த வடுவாழ் மார்பின் – பதிற்றுப்பத்து

உடம்பினை யானிருந் தோம்பிகின்றேன் - திருமூலர்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் பெயர்களில் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்ற பெயர்கள் மருந்துப் பெயர்களாக அமைந்துள்ளன. மேற்கண்ட மருத்துவக் குறிப்புகள் அனைத்தும் தமிழரின் மருத்துவச் சிந்தனைகளுக்கு உயரிய எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

## வள்ளுவத்தில் மருந்து

திருக்குறளில் மருந்து என்ற அதிகாரத்தின் வழி மட்டுமல்லாது பல்வேறு குறட்பாக்களிலும் மருத்துவக் குறிப்புகளை வெளிப்படுத்தியுள்ளார் வள்ளுவர். இதற்குக் காரணம் மனிதன் நோயற்ற பெருவாழ்வு வாழ வேண்டும் என்பதே ஆகும். வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகளுக்கு இணையாக மருத்துவச் சிந்தனைகளும் சிறப்பிடம் பெறுகின்றன.

## நோய் தோன்றுவதற்கான காரணங்கள்

உடலில் நோய் தோன்றுவதற்கான பல்வேறு காரணங்களை ஆராய்கிறார் வள்ளுவர்.

மிகினும் குறையினும் நோய் செய்யும்
வளிமுதலா எண்ணிய மூன்று (குறள் 941)

என்ற குறள் வழி காற்று, வெப்பம், நீர் இம்மூன்றில் ஏதேனும் ஒன்று குறைந்தாலும் கூடினாலும் வாதம், பித்தம், கபம் ஆகிய நோய்கள் உடலில் தோன்றும் என்கிறார் வள்ளுவர்.

" அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு "
" அமிர்தமே ஆயினும் அளவோடு உண் "

என்ற பழமொழிகளும் வள்ளுவரின் மருத்துவ அறிவுக்குச் சான்றாக அமைகின்றன. தீச்செயல்கள் மூலம் தமக்குத் தாமே நோயைத் தேடுபவர்களை "நோய் செய்தார்" ( குறள் 320 ) என்கிறார். பரத்தையர் தொடர்பால் நோய் வரும் என்பதைக் குறள் 916-இல் பதிவு செய்கிறார். பரத்தையரை "புன்னலம் பாரிப்பார்" என்கிறார் வள்ளுவர்.

அளவிற்கு அதிகமான கள், மது, புலால் உணவு போன்றவற்றால் தீமை ஏற்படுவதைக் கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல் போன்ற அதிகாரங்கள் வழி அறிவுறுத்துகின்றார். காமம், வெகுளி, சினம் போன்றவற்றால் உடலுக்கும், உள்ளத்திற்கும் தீங்கு ஏற்படும் என்பதை "சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி" என்ற குறள் வழி அளவிற்கு அதிகமான சினம் தன் உடலுக்கு மட்டுமல்லாது பிறருக்கும் தீமை தரும் என்கிறார். எனவே தீய புண்கள் தீய வினையைத் தரும் என்பது பெறப்படுகிறது. பசிக்கு முன்னால் உணவு, செரிமானம் ஆகாமல் உண்ணுதல், அளவிற்கு அதிகமான உணவு, சத்தில்லா உணவு போன்றவை மூலமாகவும் நோய்கள் தோன்றுவதாக வள்ளுவர் உணர்த்துகின்றார்.

## உணவே மருந்து

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழியை நன்கு உணர்ந்த மருத்துவ அறிவாற்றல் நிறைந்தவர் வள்ளுவர். எனவே தான் நோய் வந்த பின் மருந்து என்றில்லாமல் உணவையே மருந்து போன்று உட்கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு உட்கொள்வதால் நோயற்ற வாழ்வு வாழ முடியும் என்கிறார் வள்ளுவர்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (குறள் 942)

மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு (குறள் 945)

போன்ற குறட்பாக்கள் வழி உடலுக்கு ஏற்ற சூழலுக்குத் தகுந்த சிறந்த உணவே "நோய் தீர்க்கும் மருந்து" என்ற சிந்தனையை வெளிப்படுத்துகிறார். மேலும் சரியான காலத்தில் சரியான அளவு உணவு அமிர்தத்திற்கு நிகரானது என்கிறார் வள்ளுவர்.

## நோய் தீர்க்கும் முறைகள்

"வருமுன் காப்பதே சிறந்தது" என்ற உயரிய விழிப்புணர்வு சிந்தனையை உலகிற்கு முதலில் உணர்த்தியவர் வள்ளுவர். வள்ளுவர் நோய் தீர்க்கும் மருத்துவ முறைகளைச் சமுதாயத்திற்குச் சிறப்பாக விவரித்துள்ளார். மருத்துவர்கள் பற்றிய குறிப்புகள் திருக்குறளில் காணப்படவில்லை. எனினும் கற்றான் (949), தீர்ப்பான் (950) என்ற சொற்கள் மருத்துவரைக் குறிப்பிடுவனவாக உள்ளன. இதன் வழி மருத்துவர்கள் நோயாளிகளை அணுகும் முறையினை,

நோய்நாடி நோய்முதல் நாடிஅது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (குறள் 948)

என்ற குறள்வழி தெளிவாக விளக்குகிறார்.

நோய் தீர்க்கும் மருத்துவர்கள் நோயாளிகளின் வயது, உடலமைப்பு, உடல் திறன் ஆகியவற்றின் அடிப்படையிலும் நோயின் தன்மை, காலம், நோய்க்கு மருந்து ஆகியவற்றின் அடிப்படையிலும் நோய் தீர்க்க முயல வேண்டும் என்கிறார். இதனை,

உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல் (குறள் 949)

என்ற குறள் வழி வள்ளுவரின் உயரிய மருத்துவச் சிந்தனைகள் பெறப்படுகின்றன.

## முடிவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் வள்ளுவரின் மருத்துவம் மகத்துவம் வாய்ந்ததாகும். நோயை உண்டாக்குவதும் நோயைத் தீர்ப்பதும் "உணவே" என்ற உயரிய மருத்துவ உண்மையை உலகிற்குச் சிறப்பாக உணர்த்தியுள்ளார். மக்களின் வளமான வாழ்விற்கும் எதிர்கால மருத்துவ ஆய்விற்கும் வள்ளுவரின் மருத்துவச் சிந்தனைகள் வழிவகுப்பனவாக அமைகின்றன.

# நபிகளாரின் நயமிகு நாகரிகம்!

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

நயத்தக்க நாகரிகக் கருத்தால், பண்பால்
நானிலத்தார் உளங்கவர்ந்தோர் நபிக ளாரே!
வியத்தக்க அப்பெருமான் சீட ரோடு
வீதிவழி நடந்திட்டார்; ஒரு மூதாட்டி
தயக்கமுடன் நாயகத்தை வணங்கி, "தாங்கள்
தயைகூர்ந்தே என்னில்லம் வருக!" என்றார்
செயற்கையின்றி அழைத்திட்ட அந்தத் தாயின்
சிற்றில்லம் அடைந்திட்டார் சீடர் சூழ!

*சீராளர் 'சல்'* செம்மல் பசியை ஆற்ற
திராட்சைகளின் கொத்தொன்றைத் தட்டில் வைத்து
நேரில்லாப் பெருந்தகைமுன் வைத்தார் அன்னை;
நேயமுடன் வாயிலிட்டே மகிழ்ந்தார் அண்ணல்!
யாருக்கும் ஒருகனியும் அளித்தி டாமல்
அனைத்தையுமே மீதியின்றிச் சுவைத்த பின்னர்
மாரிநெஞ்சத் தாயிடத்தில் நன்றி கூறி
வழிப்பயணம் தொடர்ந்திட்டார் நபிகள் தோன்றல்!

வழியினிலே ஒரு சீடர், "அய்யா, தாங்கள்
வழக்கம் போல் பகிர்ந்தளித்தி டாமல் தட்டின்
முழுப்பழமும் உண்டதுமேன்?" என்றே கேட்டார்;
முறுவலுடன் நபிச்செம்மல் சொன்னார்; "தந்த
பழமெல்லாம் மிகப்புளிக்கக் கண்டேன்; உங்கள்
பல்வைத்தால் முகம்சுளிப்பீர்! அதனைக் காணும்
எழில்தாயின் உளம் வருந்தும்; எனவே உண்டேன்!"
இதைக் கேட்ட சீடர் மனம் உருகி நின்றார்!

# திருமுறைத்தலம் திருஅன்னியூர் - ஓர் ஆய்வு

தருமையாதீனப் புலவர்
**தா. குருசாமி தேசிகர்**

சங்கத்தமிழின் சுவடுகளை நினைவுக்குக் கொண்டு வருவன சைவத் தமிழ்த் திருமுறைகளாகும். சங்க நூல் பயிற்சி உடையார் பலர் சைவ சமய நூல்கள் பக்கம் சார்வதில்லை. சார்ந்திட வாய்ப்பும் இல்லை. சமய நூல் பயிற்சி உடையார் பலர் சங்க இலக்கியச் சம்பந்தமே இல்லாமல் உள்ளார். இரண்டிலும் பயணித்த அமரர்கள் அவ்வை துரைசாமி பிள்ளை, க.வெள்ளைவாரணனார், திரு.சதாசிவ பண்டாரத்தார், மா. இராசமாணிக்கனார் முதலியோர்க்குத் திருமுறை உலகமும், சங்கத்தமிழ் உலகமும் நன்றி பாராட்ட வேண்டும். அவர்கள் வழி நின்று, சைவத்தமிழ் ஆய்வு செய்யும் தருமையாதீனச் தவச்சீலர் குருமகா சந்நிதானம் அவர்கள் திருமுறை ஆசிச் செய்திகளின் ஆய்வுரைகள் இரு துருவங்களையும் இணைக்கும் ஆற்றல் பெற்றவை. இவர்களின் அடிச்சுவட்டின் வழியே திருஅன்னியூரை ஓரளவு ஆயலாம்.

## திருவன்னியூர் இன்றைய நிலை

'திருவன்னியூர்' சோழநாட்டு வடகரைத் தலம். தற்போது பொன்னூர் என்று வழங்குகிறது. மயிலாடுதுறையில் இருந்தும், நீடூரிலிருந்தும் செல்லலாம். மயிலாடுதுறை மணல்மேடு செல்லும் பேருந்து இவ்வூர் வழியே செல்கிறது. வருணன் வழிபட்ட தலம். பக்கத்தில் உள்ள தலங்கள் வேள்விக்குடி, எதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி, குறுக்கை முதலியன. இறைவன் பெயர் 'ஆபத்சகாயேசுவரர்' இறைவி பெயர் பெரியநாயகி. தலமரம் எலுமிச்சை. சம்பந்தர் பதிகம் ஒன்று, அப்பர் பதிகம் ஒன்று இத்தலத்திற்கு உரியன. சம்பந்தரின் பாடல் ஒன்று திருஇருக்குக் குறளில் ஒரு பாடல் சிந்தனைக்குரியது.

"நீதி பேணுவீர்! ஆதி அன்னியூர்ச்
சோதி நாமமே ஓதி உய்மினே"

என்ற பாடல் "நீதியைப் போற்றி, அதன்படி வாழ்கின்றவர்களே! அன்னியூரில் விளங்கும் ஒளி வடிவினனாகிய சிவபெருமான் திருநாமங்களையே ஓதி உய்வீர்களாக" என்ற கருத்தை உடையது.

## அப்பர் வழிமொழிதல்

சம்பந்தரின் இப்பாடலை வழி மொழிகிறது, அப்பரின் ஒரு பாடல்

"வேத கீதர் விண்ணோர்க்கு முயர்ந்தவர்
சோதி வெண்பிறை துன்று சடைக்கணி
நாதர் நீதியினால் அடியார் தமக்கு
ஆதியாகி நின்றார் அன்னியூரரே!

என்ற பாடல் சம்பந்தர் அருளிய நீதி, சோதி ஆகிய சொல்லாட்சிகள் அப்பரடிகளாலும், வழிமொழியப்பட்டு இருக்கின்றன. இவ்விருவரையும் வழிமொழிந்து பாடியவர் சுந்தரர் என்பதும் ஆய்வு முடிவாகும்.

## அன்னியூர் காரணம்

'அன்னிஞிமிலி' என்ற பெண்ணின் அருஞ்செயலால் இவ்வூருக்கும் அன்னியூர் என்று வந்திருக்க வேண்டும். அகநானூறு 196வது பாடலில் 'அன்னி' வரலாற்றை அமைப்பதோடு, 262வது பாடலிலும் பரணர் விளங்க எடுத்துரைக்கின்றார். இவ்வூரில் மாஞ்சோலையில் காவல் இருந்த 'கோசர்கள்' புஞ்சையில் விளைந்திருந்த பயற்றை அன்னியின் தந்தையினுடைய பசுக்கள் மேய்ந்த சிறு குற்றத்திற்காக, தந்தையின் கண்களைப் பிடுங்கி கொடுஞ்செயல் புரிந்தனர். இச்செயலைப் பொறுக்க மாட்டாத 'அன்னிஞிமிலி' கோசர், என்னும் இக்கொடிய கோலரை ஒறுக்காத வரையில் 'கலத்திலும் உண்ணேன், தூய ஆடையை உடுத்தேன்' எனத் 'தவக்கோலம்' பூண்டு, உண்ணா நோன்பு மேற்கொண்டாள். இது அகநானூற்றுச் செய்தி.

## உதவியோர்

கண்ணோட்டமின்றி தந்தையின் கண்ணைப் பறித்ததைப் பொறுக்காத 'அன்னி' மேற்கொண்ட உண்ணாநோன்பை கேள்விப் பட்ட அழுந்தை திதியனும், குறுக்கை குறும்பியனும், கோசரைக் கொன்று அன்னிஞிமிலியின் நோன்பை நிறைவு செய்தனர். இது பரணர் தரும் செய்தி. பரணர் தன் பாடல்களில் பெரும்பாலும் வரலாற்றுச் சம்பவங்களை உவமைகளாகத் தருவார். உதவிய இருவரும் சோழ சேனாதிபதிகளாக இருக்க வேண்டும். இவர்களின் ஊர்கள் இரண்டும் திருவழுந்தூர், திருக்குறுக்கை என்று இன்றும் பாடல் பெற்ற தலமாக உள்ளன.

## கோசர்

சினங்கெழுதானைத்தித்தன் என்று அகநானூறு திதியனை அடையாளங் காட்டும். திருநீடூரில் வாழ்ந்த 'முனையடுவார் நாயனாரைப்' போல 'போர்ப்படைக்கு உதவுபவன்' என்பதை அறியலாம். சிலப்பதிகாரத்தில் "கொங்கிளங் கோசர்" என்ற அடைமொழி 'கோசருக்கு' உரியதாக உள்ளது. அக் கோசர்கள் தோள் வலியும், எடுத்துக் கொண்ட தொழிலில் உறுதிமொழியும் கொண்டவர்கள். ஆதலால் அக்

கோசர்களைச் சிற்றரசர்களும், பேரரசர்களும் 'யவனர்போல' காவலுக்கு வைத்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. இக் கோசர் ஒன்றுமொழிக் கோசர் எனப்படுவார். ஒன்றுமொழியாவது வஞ்சினம். அதாவது இன்னது செய்யேன் ஆயின் இன்னது ஆவேன் என்று சபதம் செய்தல் என்பர் உரையாசிரியர். இன்று 'கூர்க்கா' என்பவரும் அவர்களே என ஆய்வு செய்யலாம்.

## தொடர் செய்திகள்

அகநானூற்று பதினைந்தாம் பாடலால், கோசர் துளுநாட்டைச் சேர்ந்தவர் என்பதும், 196ம் பாடலால் அக்கோசர் நல்ல புகழினை உடைய செல்வச் செருக்குடையவர் என்பதும் தெரிய வரும். இவர்கள் தமிழ்நாட்டு அரசர்களின் அரண்மனைகளில் நம்பிக்கைக்குரிய காவலர்களாகவும் இருந்தனர் என்பதும், அக்கோசர் நான்கு வகையினர் என்பதும் சங்க நூற்செய்திகளாகும். இனி அன்னிஞிமிலி தந்தை பெற்ற தண்டனையைக் கூறவந்த அகநானூறு 196ஆம் பாடல் சிந்தனைக்குரியது.

"தந்தை கண்களின் அழித்தத் தம்தப்பல்
தெறுவர, ஒன்றுமொழிக் கோசர் கொன்று
முரண் போக்கிய கடுந்தேர்த் திதியன் அழுந்தை
கொடுங்குழை அன்னிஞிமிலியின் இயலும்"

என்ற அடிகளால் 'அன்னியின்' தந்தைக்காக, திதியன் கோசரைக் கொன்று ஞிமிலியின் நோன்பை முடித்த செய்தி காணப்படுகிறது. இதனால் அன்னிஞிமிலியின் அருஞ்செயலை அறியலாம்.

## அன்னியூரானது

அன்னிஞிமிலியின் உண்ணாநோன்பு, கொடுஞ்செயலைத் தட்டிக் கேட்க உதவியதாகும். அப்பரடிகள் உண்ணா நோன்பும், காந்தியடிகள் உண்ணா நோன்பும் தொடங்குவதற்கு, 'இது' முன்னோடியாக இருப்பதாகும். கையிகந்த தண்டனையை வழங்கிய 'கோசர்' கொல்லப்பட்டனர். பாண்டியன் நெடுஞ்செழியன் தன் உயிர் நீத்து, கண்ணகிக்கு நீதி வழங்கியது போல, திதியன் 'அன்னிஞிமிலி' நோன்புக்காக நீதியை நிலை நிறுத்தினார். நீதி கூற வந்த வள்ளுவர்,

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோலனாயின்
ஒருவந்தம் ஒல்லைக்கெடும்"

என்றார். 'கோசர்' நிலக்காவல் செய்வதற்கு அமர்த்தப்பட்டிருக்க வேண்டும். அன்னியின் தந்தைக்குரிய மாடுகள் பயிர்களையும்,

## செந்தமிழ் வாசகர்களிடமிருந்து தரமான ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

சங்க காலந்தொட்டு, தமிழர்களின் அடையாளமாகவும், பண்பாட்டுக் கருவூலமாகவும் திகழ்ந்து வருகின்ற தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணங்கள் புலப்படுத்துகின்ற தமிழர் வாழ்வியல், பண்பாட்டியல், மானிடயியல், வரலாற்றியல், அறிவியல் தொழில் நுட்பவியல், கலைவியல், சிற்பவியல் முதலான பொருண்மைகளில் ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

கட்டுரைகள் ஆய்வுநோக்கில், தரவுகளின் அடிப்படையில், தெளிவான நடையில் அமைவது எதிர்நோக்கப்படுகிறது.

– ஆசிரியர் –


தொடர்பு முகவரி

ஆசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 September 2014 Post Regd. No. MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, 6575615

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 2014–2015ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI M.A., M.Phil.** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI M.A., M.Phil.**